- RV Fashion – Credit : 20% Debit : 10% 10th & 11th December
- Velona – Credit : 20% Debit : 10% 16th & 17th December
- Arista – Credit : 20% Debit : 10% 16th & 17th December
- Uptown Kandy – Credit : 20% 25th & 26th November
- Shopimo – Credit : 20% Debit : 10% 7th, 9th & 10th December
- Supul Collection – Credit : 20% 1st & 2nd December
- Zuzi – Credit : 20% Debit : 10% 7th & 8th December
- Athukorala Textiles – Credit : 20% Debit : 10% 24th, 25th & 26th December
- Level Outfitters – Credit : 20% Debit : 15% 26th & 27th December
- Piyara Fashion – Credit : 20% Debit : 10% 10th & 11th December
- Kelly Felder – Credit : 20% Debit : 10% 20th & 21st November
- Nils Store – Credit : 20% (Min. Bill Value LKR 5,000/-) 26th & 27th November
- Will by Zac – Credit : 20% 30th & 31st December
- Nora Reed – Credit : 20% Debit : 10% 17th & 18th December
- Thilakma Fashion – Credit : 20% 3rd & 4th December
- Queen Nithijaya – Credit : 20% Debit : 10% 12th to 18th December
- Nithijaya Saree Fashion – Credit : 20% Debit : 10% 12th to 18th December
- Kandygs Handlooms – Credit : 20% Debit : 10% 7th, 10th & 11th December
- Sting Clothing – Credit : 20% Debit : 10% 19th & 20th December
- MAGS – Credit : 20% 24th, 25th, 30th & 31st December
- Fashion Bug – Credit : 20% 13th & 14th December
- Rich Look – Credit : 20% Debit : 10% 26th & 27th December (Min. Bill Value LKR 3,000/-)
- Saman Mal – Credit : 20% Debit : 10% 11th December (Min. Bill Value LKR 5,000/-)
- Cool Planet – Credit : 20% Debit : 10% 5th & 12th December (On Selected Items)
- Exibit – Credit : 20% Debit : 10% 5th & 12th December (On Selected Items)

## ஏனையவை

**30%**
- Wickramarachchi Opticians – Credit & Debit : Free Hearing & Eye Testing, 30% Off On Frames & Sunglasses Till 30th December

**10%**
- Crazy Jets – Credit : 10% 15th November to 31st December (Max. Discount : LKR 15,000/-)

விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

www.peoplesbank.lk

1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK

Pride of the Nation

AA- (lka) - பிட்ச் ரேட்டிங், AAA- பிராண்ட் பினான்ஸ் ரேட்டிங்
மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2022, டிசம்பர் 08ஆம் திகதி, வியாழக்கிழமை**

# தேர்தலை இழுத்தடிக்கலாமா?

தேர்தலொன்று எப்போது வரும் என்பது அனைத்து மக்களினதும் எதிர்பார்ப்பாக இருந்தாலும், அதற்குரிய அறிகுறி எதனையும் காணவில்லை.

ஒரு ஜனநாயக நாட்டில் அந்த ஜனநாயகம் செழித்து ஓங்க வேண்டுமானால் அதற்கு முக்கியமானது தேர்தல். காலம் தவறாமல், மக்கள் கருத்தியலை வெளிப்படுத்தும் விதத்தில், நீதி நேர்மையான முறையில் தேர்தல்கள் ஒழுங்காக நடத்தப்பட வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை தேர்தல்களை ஒழுங்காக நடத்தி, ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பு தேர்தல் ஆணையத்திடம்தான் வழங்கப்பட்டிருக்கின்றது. அதனால்தான் அந்தத் தேர்தல் ஆணையத்துக்கு விசேட அதிகாரங்களும் சுயாதீனமாகச் செயற்படும் தனித்துவ உரித்தும் வழங்கப்பட்டிருக்கிறது.

எனினும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் நியமிக்கப்பட்ட இப்போது பதவியில் இருக்கும் தேர்தல்கள் ஆணையம் தனது சுயாதீன தனித்துவத்தையும் அதிகாரத்தையும் கையில் எடுத்துச் செயல்படுவதாக இல்லை.

இந்தத் தேர்தல் ஆணையத்துக்கு தேர்தல் என்ற வகையில் நடத்துவதற்கு கிடைத்த முதல் சந்தர்ப்பம் இந்த உள்ளூராட்சி சபை தேர்தல்கள்தான். ஆனாலும், அது தொடர்பில் ஒரு முடிவெடுக்க முடியாமல், இறப்பர் போல் இழுபட்டுக் கொண்டு கிடக்கின்றது இந்த ஆணையம்.

தற்போதைய உள்ளூராட்சி சபைகளின் நீடிக்கப்பட்ட பதவிக்காலம் எதிர்வரும் மார்ச் 20ஆம் திகதியுடன் முடிவடைந்து விடும். அதற்கு முன்னர் புதிய உள்ளூராட்சி சபைகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட்டு, அவை பதவியேற்கத் தயாராக இருக்க வேண்டும். அந்தத் தேவைப்பாட்டை தேர்தல் ஆணையம் நிறைவு செய்ய வேண்டும் என சட்டம் எதிர்பார்க்கிறது.

மார்ச் 20இல் இந்தத் தேர்தலை நடத்தி முடித்திருக்க வேண்டும் என்றால், குறைந்தபட்சம் ஜனவரி 5ஆம் திகதிக்கு முன்னர் அந்தத் தேர்தலுக்கான அறிவிப்பை விடுத்து, அதனை நடத்துவதற்குத் தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

இந்த அறிவிப்பை விடுப்பதற்கான அதிகாரம் இந்தத் தேர்தல் ஆணையத்துக்கு வந்து ஏற்கனவே இரண்டரை மாதங்கள் கடந்து விட்டன. ஆனால், தேர்தல் ஆணையமோ இக்காலகட்டத்தில் அந்த, இந்த சாக்குப் போக்குகளைச் சொல்லி தேர்தலுக்கான அறிவிப்பை விடுக்காமல் இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றது.

கடைசியாக, சட்டமா அதிபரின் கருத்துக் கேட்டல் என்ற சாக்குப் போக்கும் சொல்லப்பட்டது. தேர்தல் ஆணையம் தானே முடிவெடுத்து அறிவித்தால், உள்ளூராட்சித் தேர்தலை நடத்தத் தடை ஏதும் கிடையாது என்று சட்டமா அதிபரும் கோடி காட்டிவிட்டார்.

ஆனால், தேர்தல் ஆணையமோ தூங்குவது போன்று நடிக்கும் தனது பண்பியல்பிலிருந்து வெளிப்படுவதாக இல்லை. அதனால் அதைத் தட்டி எழுப்பியும் கூட தேர்தல் அறிவிப்பை விடுக்கச் செய்ய முடியுமோ தெரியவில்லை.

இன்னும் மூன்று மாதங்களுக்குள் நாடு முழுவதிலும் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தி முடிக்கப்பட வேண்டும். ஆனால், அதற்கான தேர்தல் எழுச்சி நாட்டில் எங்கும் இல்லை. அதற்குக் காரணம் தேர்தல் ஆணையம்தான்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வந்தால் இப்போதைய அரசின் மக்கள் ஆதரவு அப்பட்டமாக தெரிந்துவிடும். அதனால் தேர்தலொன்றுக்கு அச்சமில்லை என்று தெரிவித்தாலும் ஆளுங்கட்சியினருக்கு உள்ளூர பெரும் பீதி இருக்கிறதென்பது பரகசியம். எதுவென்றாலும் 'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்பதால் அதற்கு இடம்கொடுக்க வேண்டும் தேர்தல் ஆணையம். அதைவிடுத்து மேலும் சாக்குப்போக்குச் சொல்லி இழுத்தடித்துக்கொண்டிருப்பது ஜனநாயகத்திற்கு மாண்பல்ல.

# இன்றைய நாளில்...

* 1609: இத்தாலியின் மிலான் நகரில் அம்புரோரியானோ நூலகம் திறக்கப்பட்டது. இதுவே ஐரோப்பாவின் இரண்டாவது பொது நூலகமாகும்.
* 1854 – இயேசுவின் தாய் மரியாள் பிறப்புநிலைப் பாவத்தில் இருந்து பாதுகாக்கப்பட்டதை அறிவிக்கும் அமலோற்பவ அன்னை பற்றிய திருத்தந்தையின் தவறா வரம் ஒன்பதாம் பயசு திருத்தந்தையால் அறிவிக்கப்பட்டது.
* 1974: கிரேக்கத்தில் நடைபெற்ற பொது வாக்கெடுப்பில் மன்னராட்சியை இல்லாதொழிக்க மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்தனர்.
* 1985 – சார்க் அமைப்பு இந்தியா, பாகிஸ்தான், வங்காள தேசம், இலங்கை, நேபாளம், மாலைதீவு மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளினால் உருவாக்கப் பட்டது.
* 2004 : தென் அமெரிக்க நாடுகள் ஒன்றியம் உருவானது.
* 2010: 'எஸ்பேஸ் எக்ஸ்' என்ற தனியார் நிறுவனம் பால்கன்-9 விண்கலத்தை இரண்டாவது முறையும் டிராகன் விண்கலத்தை முதலாவது முறையும் விண்வெளிக்கு ஏவியது.
* 2010 : ஜப்பானின் கார்க்கோஸ் விண்கலம் வெள்ளிக் கிரகத்தை 80,800 கி.மீ. தூரத்தில் கடந்தது.

# காட்சி மாற்றம்!

இந்தியாவும் பாகிஸ்தானும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து ஒரே நாளில் விடுதலை பெற்ற அண்டை நாடுகள். இந்தியாவில் இராணுவ தலைமைத் தளபதியின் நியமனம் என்பது பெரும்பாலும் மக்களின் கவனத்துக்குக்கூட வராத நடைமுறையே.

பாகிஸ்தானில் அப்படியல்ல. இராணுவ தலைமைத் தளபதியின் நியமனம் என்பது பிரதமர் நியமனத்தைவிட முக்கியத்துவம் பெறும் செய்தி. இந்தியாவில் இராணுவ தலைமைத் தளபதியை பிரதமர் நியமிக்கிறார் என்றால், பாகிஸ்தானில் இராணுவ தலைமைத் தளபதிதான் பிரதமரையே நியமிக்கிறார் என்று சொல்லும் அளவுக்கு அங்கு இராணுவ தளபதி அதிகாரம் பெற்றவர்.

ஜெனரல் கமர் ஜாவேத் பாஜ்வா தனது ஆறாண்டு பதவிக் காலத்தைத் தொடர்ந்து மேலும் மூன்று ஆண்டுகால நீட்டிப்பு கேட்டிருக்கலாம். அவர் கேட்கவில்லை. பதவியிலிருந்து ஓய்வுபெற முடிவெடுத்தார். ஜெனரல் பாஜ்வாவைத் தொடர்ந்து, பாகிஸ்தான் இராணுவத்தின் 17ஆவது தலைமைத் தளபதியாக அவரது நம்பிக்கைக்குரியவரான லெப்டினன்ட் ஜெனரல் சையது அசிம் முனீர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.



முனீரின் நியமனத்துக்குப் பின்னால், ஏராளமான அரசியல் நாடகங்கள் நடந்தேறின. ஜெனரல் பாஜ்வாவால் 2018 ஒக்டோபர் மாதம் ஐ.எஸ்.ஐ. என்கிற பாகிஸ்தான் உளவுத்துறைத் தலைவராக நியமிக்கப்பட்ட சையது அசிம் முனீர், அன்றைய பிரதமர் இம்ரான் கானின் வற்புறுத்தலால் எட்டே மாதத்தில் பதவியிலிருந்து அகற்றப்பட்டார். இம்ரான் கானின் மனைவி புஷ்ரா பிபியின் ஊழல்கள் குறித்து முனீர் விசாரிக்கத் தொடங்கியதுதான் பதவி மாற்றத்துக்கான காரணம். அவருக்கு பதிலாக இம்ரான் கானின் நம்பிக்கைக்குரிய லெப்டினன்ட் ஜெனரல் ஃபைஸ் ஹமீத் நியமிக்கப்பட்டார்.

ஜனாதிபதி ஆரீஃப் அல்வி, இம்ரான் கானால் நியமிக்கப்பட்ட அவரது ஆதரவாளர். முனீரின் பதவிக்காலம், ஜெனரல் பாஜ்வாவின் பதவிக்காலம் முடிவதற்கு இரண்டு நாட்கள் முன்பாகவே முடிவடையும் என்பதால், தலைமைத் தளபதி நியமனத்தை தாமதிக்க நினைத்தார் ஜனாதிபதி.

பிரதமர் ஷெரீஃப் தலைமையிலான அரசுத்தரப்பு விழித்துக் கொண்டது. முனீரை இராணுவத்தின் தலைமைத் தளபதியாக நியமிக்க முடிவு செய்தது. அதற்கு அல்வியின் ஒப்புதல் தேவையில்லை. வேறு வழியில்லாமல், பணிமூப்பு அடிப்படையில் லெப்டினன்ட் ஜெனரல் முனீரின் நியமனத்துக்கு ஒப்புதல் அளித்தார் அல்வி.

திருக்குரானை மனப்பாடமாகக் கற்றுத் தேர்ந்தவர் முன்பு பாகிஸ்தான் ஒற்றர் படைத் தலைவராக இருந்த லெப்டினன்ட் ஜெனரல் சையது அசிம் முனீர். அவருக்கு நீண்ட இராணுவ அனுபவம் இருப்பதை யாரும் மறுத்துவிட முடியாது. ஷெரீஃப் அரசின் முடிவுக்குப் பின்னால் பணிமூப்பு அடிப்படை இருந்ததால்தான், இம்ரான் கான் உள்பட எந்த அரசியல் தரப்பினராலும் அரசின் முடிவை எதிர்க்க முடியவில்லை.

ஜெனரல் பாஜ்வாவின் தலைமையில், பாகிஸ்தான் இராணுவம் உள்நாட்டு அரசியலில் முக்கிய பங்கு வகித்தது. 2018இல் இம்ரான் கான் தலைமையிலான பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாஃப் கட்சியை ஆட்சியில் அமர்த்தியதும், இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பதவியிலிருந்து அகற்றியதும், பாஜ்வாவின் விருப்பப்படிதான் என்பது உலகறிந்த இரகசியம். தன்னை ஆட்சியிலிருந்து அகற்றியதும், தன்னைக் கொல்ல சதி செய்ததும் ஜெனரல் பாஜ்வாவும், மூத்த இராணுவ அதிகாரிகளும்தான் என்று இம்ரான் கான் வெளிப்படையாகவே குற்றம் சாட்டினார்.

இது புதிதொன்றும் அல்ல. தனக்கு எதிராக சதி செய்து, நீதித்துறையை பயன்படுத்தி தன்னை பதவியிலிருந்து அகற்றி இம்ரான் கானை பதவியில் அமர்த்தியது ஜெனரல் பாஜ்வா என்று முந்தைய பிரதமர் நவாஸ் ஷெரீஃபும் குற்றஞ்சாட்டியிருக்கிறார். இதற்கு முன்னால் இருந்த எல்லா பிரதமர்களும் இராணுவத்தின் மீது இதுபோன்ற குற்றச்சாட்டுகளை வைத்திருக்கிறார்கள். அவற்றில் உண்மை இல்லாமல் இல்லை.

இந்தப் பின்னணியில்தான் இப்போது லெப்டினன்ட் ஜெனரல் சையது அசிம் முனீர் பாகிஸ்தானின் தலைமைத் தளபதியாகப் பொறுப்பேற்றிருக்கிறார். 2019 புல்வாமா தற்கொலைப்படை தாக்குதலின்போது ஐ.எஸ்.ஐ. தலைவராக இருந்த அசிம் முனீர் இப்போது தலைமைத் தளபதியாகியிருக்கிறார். பொதுவெளியில் தன்னைக் காட்டிக் கொள்ளாமல், எந்தவித சர்ச்சையிலும் சிக்காமல் இருக்கும் அதிகாரிகளில் ஒருவரான முனீரின் கண்ணோட்டம் குறித்து யாருக்கும் தெளிவாகத் தெரியாது.

பாகிஸ்தான் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி, ஜெனரல் பாஜ்வாவின் இந்தியாவுடனான மோதல்கள் இல்லாத அணுகுமுறை, ஆப்கானிஸ்தான், அமெரிக்கா, சீனா உள்ளிட்ட நாடுகளுடனான உறவு, அரசியல் நிலைப்பாடு, நிர்வாகத் தலையீடு போன்ற பிரச்சினைகளில் புதிய இராணுவ தலைமைத் தளபதியின் பார்வை எப்படியிருக்கும் என்று யாராலும் கணிக்க முடியவில்லை.

அடுத்த ஆண்டு தேர்தல் நடக்க இருக்கும் நிலையில், இம்ரான் கானின் கட்சி ஆட்சியைப் பிடிக்குமானால், அவருக்கும், இராணுவத்தின் தலைமைத் தளபதி முனீருக்கும் இடையேயான உறவு எப்படி இருக்கும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

தேர்தல் நடப்பதும், அடுத்த ஆட்சி அமைவதும் லெப்டினன்ட் முனீரின் கையில் என்பது மட்டும் இப்போதைக்கு எல்லோருக்கும் தெரிந்த உண்மை. பாகிஸ்தானைப் பொறுத்தவரை, எப்போதுமே இராணுவம்தான் அதிகார மையம். லெப்டினன்ட் ஜெனரல் சையது அசிம் முனீர் அதன் தலைமைத் தளபதி.

வருங்கால பாகிஸ்தான் அரசியலை ஜெனரல் பாஜ்வாபோல அவர் இயக்குவாரா, இல்லை முந்தைய இராணுவ தளபதிகளான அயூப் கான், ஜியா உல் ஹக், முஷாரஃப் வரிசையில் தானே நடத்துவாரா என்பதை இப்போதே சொல்ல முடியாது.

**நன்றி - தினமணி**



# அறவினை யாதெனில் கொல்லாமை...

**மா. இராமச்சந்திரன்**

மனிதக் கொலைகள் இப்போது மலிந்துவிட்டன. சிறுமி கொலை, சிறுவன் கொலை, இளம்பெண் கொலை, வாலிபன் கொலை, காதலன் கொலை, காதலி கொலை, கணவன் கொலை, மனைவி கொலை, முதியவர் கொலை, மூதாட்டி கொலை, விவசாயி கொலை, வியாபாரி கொலை, தொழிலதிபர் கொலை, ஆணவக் கொலை, அரசியல் கொலை என்று நாள்தோறும் பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன.

இவற்றையெல்லாம் படிக்கும்போது நெஞ்சம் பதறுகிறது. ''உலகில் ஒவ்வொரு 11 நிமிடத்துக்கும் ஒரு பெண் அவருடைய காதலன் அல்லது குடும்ப உறுப்பினர்களால் கொல்லப்படுகிறார்'' என்று ஐ.நா.பொதுச்செயலாளர் குறிப்பிட்டிருப்பது, உலகெங்கிலும் இந்தக் கொலைவெறி மிகுந்துள்ளது என்பதைக் காட்டுகிறது.

கொலை என்பது கொடூரச்செயல். இதனை விலக்கி வாழ்வதே அறவாழ்க்கை என்பது முன்னோர்களின் முடிவு. ஓர் உயிரையும் கொல்லாமையே அறமாகும். அறமில்லாச் செயல்கள் எல்லாவற்றையும் கொலை விளைவித்துவிடும் என்கிறார் வள்ளுவர் (குறள்: 321).

கொலைப் பாவத்தால் விளையும் துன்பத்தைப் பிற எல்லாப் பாவங்களும் கூடியும் விளைவிக்காது. கொல்லாமை என்பது பிற அறங்கள் எல்லாவற்றின் பயனையும் தரும் என்பது வள்ளுவர் குறளுக் கான விளக்கம். இதனால் 'கொல்லாமை ஒரு பெருந்தர்மம்' என்பது புலனாகும். இப்பெருந் தர்மம் இப்போது தடுமாற்றத்தில் உள்ளதுபோல் தெரிகிறது.

உணவுக்காகப் பிற உயிர்களைக் கொல்லுதல் கூட பாவம் என்று கருதிய இப்பூமியில் மரங்களை வீழ்த்துவது போல் மனிதர்களை வெட்டிச் சாய்க்கும் செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. போர்க்களத்தில் எதிரிகளைக் கொல்வது போர் மரபு. அப்படிக் கொன்றதற்குக் கூட வருத்தப்ப டுகிறார் தருமர்.

''நண்பர்களையும் உறவினர்களையும் கொன்ற தால் அழிவற்ற பாவத்தை அடைந்து தலைகீழாக நரகத்தில் விழப் போகிறோம்'' என்று கவலைப் பட்டு வாடுகிறார். ஆனால், இங்கோ திட்டம் போட்டுக் கொலை செய்யும் தீவிரச் செயல்கள் பெருகிவிட்டன. நாட்டில் நடைபெறும் கொலை களுக்கு - பெரும்பாலும் முன்விரோதம், தகாத உறவு போன்றவையே காரணங்களாக அமைகின்றன.

சொத்துத் தகராறு, தேர்தல்கால மோதல், கோயில் திருவிழா பிரச்சினை, ஏற்கெனவே நிகழ்ந்த கொலை, சாதி மோதல் போன்றனவற்றால் முன்விரோதம் எழுகின்றது. இந்த முன்விரோதம் சண்டையாகி, கொலையில் முடிகிறது. ஓர் அடி நிலத்தைக்கூட விட்டுக் கொடுக்க முடியாத மனநிலை, தேர்தல் கால மோதலைத் தாங்கிக் கொள்ள முடியாத தன்மை, கோயில் நிர்வாகத்தில் ஏற்படும் மனக்கசப்பு, முன்னர் நடந்த கொலை போன்றவற்றால் பகைமை தோன்றுகிறது.

இந்தப் பகைமை முன்விரோதமாக மாறுகிறது. இவற்றுள் முன்னர் நடந்த கொலையால் ஏற்பட்ட பகைமையைத் தவிர மற்றவை எல்லாம் விட்டுக்கொடுத்தோ, பேசியோ தீர்த்துவிடக் கூடியவையே. மனிதர்களுக்கு இந்த மனப்பான்மை இல்லாமையால்தான் கொலைப் பாதகம் நிகழ்கிறது.

முன் நடந்த கொலையால் ஏற்படும் முன் விரோதத்தால் 'பழிக்குப் பழி' என்ற குரோத மனப்பான்மை உண்டாகி, 'உயிருக்கு உயிர்' என்ற வன்மம் எழுகிறது. 'நீதி மன்றம் கொடுத்த தண்டனை போதும்' என்று ஏற்று ஆறுதல் அடைய முடியாத நிலை இன்னொரு கொலை செய்யத் தூண்டிவிடுகிறது. ''புதிதாக ஒரு உயிரை எடுப்பதால் ஏற்கெனவே போன உயிர் வந்துவிடப் போவதில்லை'' என்ற புரிதல் இல்லாமை மற்றொரு கொலைக்கு வழி வகுத்துவிடுகிறது.

தகாத உறவால் நடக்கும் கொலைகளும் இப்போது பெருகி வருகின்றன. நடத்தையில் சந்தேகப்பட்டு மனைவியைக் கணவன் கொல்வது, கள்ளக் காதலைக் கைவிட முடியாத மனைவி கணவனைக் கொல்வது, தகாத உறவுக்கு இடையூறாக இருக்கும் குழந்தையைக் கொல்வது என்பன அன்றாடம் செய்திகளில் இடம்பெறுகின்றன. பெண்களும் சிறுமிகளும் அதிகம் கொல்லப்பட்டாலும் ஆண்களும் உயிரிழக்கத்தான் செய்கின்றனர்.

கணவன் - மனைவிக்கிடையில் சரியான புரிதல் இல்லாமையே இத்தகைய தகாத உறவுக் கொலைகளுக்குக் காரணம். பாலியல் வேட்கை என்பது இயல்பான ஒன்று. அதனை நெறிப்படுத்தி வாழ்வதற்கே இல்லற தர்மம் உண்டானது. இதனை சரியாகத் தெரிந்து ஆணும் பெண்ணும் நடந்து கொண்டால் இத்தகைய தகாத உறவால் ஏற்படும் கொலைகளைத் தவிர்க்க முடியும்.

இவை போக ஆத்திரத்தால் அறியாமல் நடக் கும் கொலைகளும் உள்ளன. கணவனுக்கும் மனைவிக்கும் ஏற்படும் வாய்த்தகராறு ஆத்திரத்தில் அடிதடியாக மாறி மரணம் சம்பவித்தலும் உண்டு. இதேபோல் நண்பர்கள் சிலர் சேர்ந்து மது அருந்தும்போது ஏற்படும் சிறிய தகராறு பெரிய சண்டையாகி கொலையில் முடிகிறது. திருடப் போகின்றவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள் வதற்காகச் செய்யும் கொலைகளும் உள்ளன. சாதி, சமயம், அரசியல் பின்னணியிலும் கொலைகள் நடைபெறுகின்றன.

மரக்கறி நறுக்கும் கத்தியும் மரம் வெட்டும் அரிவாளும் பூச்சிக்கொல்லி மருந்தும் மலையைத் தகர்க்கும் வெடிகுண்டும் மனிதனைக் கொல்லும் கொலைக் கருவிகளாகிவிட்டன. அதனைக் கையாள இங்கே கூலிப்படை உள்ளது. ஆம், மரத்தை வெட்ட கூலியாள் இருப்பது போல் மனிதனைக் கொல்லவும் கூலிப்படை இருக்கிறது இங்கே. ஒரு கொலை காரணமாக கொலை செய்யப்பட்டவரின் குடும்பம், கொலையாளியின் குடும்பம் என இரு குடும்பங்களும் பாதிப்புக்குள்ளாகின்றன. கொலைக் குற்றத்திற்கும் கொலைத் தூண்டலுக்கும் கடும் தண்டனை விதிக்கப்படுகிறது. ஒருவேளை நீதிமன்றத் தண்டனையிலிருந்து தப்பித்தாலும் செய்த பாவம் விடாது என்ற நம்பிக்கையும் பாதிக்கப்பட்டோருக்கு இருக்கிறது. இருந்தாலும், கொலைகள் மட்டும் குறையவில்லை. விரைவில் இந்தக் கொலைவெறிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.


**(நன்றி - தினமணி)**



# ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை நிர்வாக சீர்கேடுகள் கோப் குழு ஆய்வில் புலப்பட்டன

## ★ கணக்காய்வாளர் நாயகத்தின் விசேட அறிக்கையை விசாரிக்க அழைப்பு

## ★ நில அளவை குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பணிப்பு









அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தலைமையில் நேற்று முன்தினம் (06) கூடியபோது ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையின் பிரச்சினைகள் பல அடையாளம் காணப்பட்டன.

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தினால் 5 வருடங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்த கணக்காய்வு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கோப் குழு கூடியது. இதில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைச் சட்டம், அதன் பணி, நோக்கம், இதனை அடைவதற்கான செயற்பட்ட விதம் குறித்து கலந்துரையாடப்பட்டது. மேலும், இந்தச் சட்டத்தின் பிரகாரம் நிர்வாக சபைக்கு உறுப்பினர்களை நியமிக்கும்போது வைத்திய சாலை பணியாளர்களைப் பிரதிநிதித்துவப்பபடுத்தும் வகையில் நியமனங்கள் மேற்கொள்வது ஆர்வத்திற்கு முரண்பாடானதாக இருந்தால் அது குறித்தும் கவனத்தில் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

கணக்காய்வாளர் நாயகத்தினால் சுட்டிக்காட்டப்பட்ட நிர்வாகக் குறைபாடுகள் குறித்தும் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது. நீண்ட கால மற்றும் குறுகிய காலத் திட்டம் சரியான முறையில் இன்மையால் திட்டமிடுதலில் கடுமையான பலவீனம் உள்ளது என்பதும் இங்கு புலப்பட்டது.

இதன்படி, இந்த நிறுவனத்தின் தொலைநோக்குப் பார்வையின்படி, 2030ஆம் ஆண்டுக்குள் தெற்காசியாவிலேயே சிறந்த மருத்துவமனையாக மாறுவதற்கான இலக்கை எட்டுவதற்கு 2 மாதங்களுக்குள் பொருத்தமான மூலோபாயத் திட்டங்களைச் சமர்ப்பிக்கவும் இங்கு முன்மொழியப்பட்டது.

நிதி முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம், கொள்வனவு முகாமைத்துவம், விற்பனை மற்றும் வர்த்தக அபிவிருத்தித் திட்டங்கள், கணக்காய்வாளர் நாயகத்தினால் சுட்டிக்காட்டப்பட்ட நிர்வாகச் சிக்கல்களை எவ்வாறு கையாள்வது போன்ற விடயங்கள் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இவ்வாறு தயாரிக்கப்படும் திட்டத்தை கோப் குழுவிடம் சமர்ப்பிக்குமாறும் பரிந்துரைக்கப்பட்டது.

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை வளாகத்திற்கு சொந்தமான காணியின் பரப்பளவு அடையாளம் காணப்பட வேண்டும் எனவும், அங்கீகாரமற்ற ஆக்கிரமிப்புகள் இருப்பின் அவற்றை அகற்ற சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கோப் குழு பரிந்துரைத்துள்ளது.

கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, பல்வேறு ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பணம் செலுத்தப்பட்டுள்ள போதிலும், சேவை பூரணப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்களுக்கான பணத்தை மீண்டும் அறவிட நடவடிக்கை எடுக்குமாறும் கோப் குழு பரிந்துரைத்தது.

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் பெருமளவிலான நிர்வாகப் பிரச்சினைகள் காணப்படுவதாக கோப் குழு கண்டறிந்துள்ளது. அவற்றுக்கான தீர்வுகள் குறித்தும் இங்கு ஆலோசிக்கப்பட்டதுடன், அதனைக் கையாள்வதற்கு கோப் குழுவின் உப குழுவொன்றை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. இந்த உபகுழு மருத்துவமனைக்குச் சென்று கண்காணிப்புக்களை மேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் அனைத்து முக்கிய அம்சங்களையும் உள்ளடக்கியதாக விசேட கணக்காய்வு அறிக்கையை தயாரிக்குமாறு கோப் குழு, கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிவித்தது.

பணிப்பாளர் குழுவில் மருத்துவமனையின் அனைத்து ஊழியர்களும் இருக்க வேண்டும் என்றும், அதன் செயல்திறனை மேம்படுத்த பல துணைக் குழுக்களை நியமித்து அவை ஆதரிக்கப்பட வேண்டும் என்றும் கோப் குழு சுட்டிக்காட்டியது.

2015ஆம் ஆண்டில் நில அளவையாளர் நாயகத்தினால் வைத்தியசாலையின் நிலப்பரப்பு நில அளைவை செய்யப்பட்டிருந்தபோதும், மீண்டும் தனியார் நில அளவையாளரினால் வைத்தியசாலையின் மருத்துவமனை மீண்டும் அளவை செய்யப்பட்டுள்ளது.

ஏன் இவ்வாறு மீண்டும் நில அளவை மேற்கொள்ளப்பட்டது என்றும், இதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பெயர் விபரங்களுடன் கூடிய விரிவான அறிக்கையை கோப் குழுவிடம் சமர்ப்பிக்குமாறும் சட்ட அதிகாரிக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

நரம்பியல் சத்திரசிகிச்சைப் பிரிவுக்காக 4.2 மில்லியன் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட சத்திரசிகிச்சைப் பொருட்களில் 80% காலாவதியான விடயத்தில், பொறுப்பான அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பது குறித்தும் கோப் குழு கேட்டறிந்தது. சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கை சில நாட்களுக்கு முன்னர் வைத்தியசாலைக்கு கிடைத்துள்ளதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர். இது தொடர்பாக முழு விசாரணை நடத்தி 2 வாரங்களுக்குள் குழுவுக்கு அறிக்கையிடுமாறு அமைச்சின் செயலாளருக்கு கோப் குழு பரிந்துரைத்தது.

2019ஆம் ஆண்டில் ஒரு மென்பொருளுக்கு 1.8 மில்லியன் ரூபாவும், ஆவணங்களை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்வதற்கு 19.7 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டமை குறித்து கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு தொடர்பில் விசாரணை நடத்தி இரண்டு வாரங்களுக்கு கோப் குழுவிடம் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு, வைத்தியசாலையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உள்ளிட்ட நிர்வாகத்துக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆராய்வதற்கு மூன்று மாதங்களில் மீண்டும் அழைப்பதற்கும் கோப் குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர்களான இந்திக்க அனுருத்த ஹேரத், சாந்த பண்டார, நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுர திசாநாயக்க, பாட்டலி சம்பிக்க ரணவக்க, இரான் விக்கிரமரத்ன, நிமல் லான்சா, எஸ். எம்.எம்.முஷாரப், ஜகத் குமார சுமித்ராராச்சி, (மேஜர்) சுதர்சன் தெனிபிட்டிய, உபுல் மகேந்திர ராஜபக்ஷ, சட்டத்தரணி மதுர விதானகே ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

அத்துடன், கணக்காய்வாளர் நாயகம், சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், ஜயவர்தனபுர வைத்தியசாலையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் மற்றும் ஏனைய நிர்வாக உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

## யாழ். மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம்






***யாழ். நிருபர்***

யாழ்ப்பாண மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் அரச அதிபர் கணபதிப் பிள்ளை மகேசன் தலைமையில் நேற்று முன்தினம் (06) யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது அரச அதிபர், யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு குறிக்கப்பட்ட கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

நீர்ப்பம்பி ஊடான நீர் இறைப்புக்கும், தென்னைப் பயிர்ச்செய்கைக்கும் மண்ணெண்ணெய் போதாமல் உள்ளதாக விவசாயிகள் கோரிக்கை முன்வைத்தனர். அது தொடர்பாக கலந்துரையாடி அதற்குரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அரச அதிபர் கூறினார்.

உணவுப் பாதுகாப்பு, நெற்செய்கையில் பொட்டாசியம் குறைபாடு, அது தொடர்பான விவசாயிகளுக்கான பயிற்சிகள், பாடசாலைகளில் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், நெற்செய்கைக்கான திரவ உர விநியோகம், சேதனப் பசளை விநியோகம், மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கான மண்ணெண்ணெய் விநியோகம், உருளைக்கிழங்கு செய்கை பாதிப்பு, விதை உற்பத்தி மற்றும் அடிப்படை விதைகளை வழங்குதல், விவசாயிகளுக்கான காப்புறுதி நடடிக்கைகள், முட்டை உற்பத்தி மற்றும் விலங்கு பாதுகாப்பு தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும், விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் விதை அபிவிருத்திப் பிரிவினரால் 2022ஆம் ஆண்டுக்கான யாழ். மாவட்ட சிறந்த விதை உற்பத்தியாளர்களுக்கான சான்றிதழ்களும் மாவட்ட அரச அதிபரினால் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலின் தொடர்ச்சியாக மாவட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கு தொடர்பான மாவட்ட ஒருங்கிணைந்த பொறிமுறையின் மூன்றாவது முன்னேற்றக் கூட்டமும் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் தமக்கு மிகையாக காணப்படும் உணவுகளை சேமித்து உணவு வங்கியை உருவாக்குதல், இதனூடாக நலிந்த மற்றும் குறைந்த வருமானம் உடைய குடும்பங்களுக்கு உணவு வழங்குதல், வங்கிகள் ஊடாக விவசாயிகளுக்கு கடன் உதவிகளை வழங்குதல் போன்றவை தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், வங்கிகளின் பிரதிநிதிகள், வணிகர் சங்கத் தலைவர், கமநல அமைப்புகள், துறைசார் உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## மாத்தறையில் நீர் விநியோகத் தடை

***பேருவளை பி.எம்.முக்தார்***

மாத்தறை மாவட்டத்திலுள்ள மாலிம்பட நீர்த்தாங்கி முதல் இஸ்ஸதீன் நகர நீர்த்தாங்கி வரை நீரைக் கொண்டுசெல்லும் நீர்க்குழாயில் அத்தியாவசிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், இன்று வியாழக்கிழமை (07.09.2022) காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரையிலான 8 மணிநேர நீர் விநியோகத்தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

மடிஹ, கம்புறுகமுவ, கொட்டவில, யென்வெல, மிரிஸ்ஸ, ஹெவ கமந்துவ, காலி வீதி கம்புறுகமுவ முதல் மிரிஸ்ஸ வரையிலான பகுதிகளில் நீர் விநியோகம் தடைப்படும். இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை வருத்தம் தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

## யாழ்.பல்கலை சூழலில் கூடும் இளைஞர் கூட்டம் மாணவிகளுடன் சேட்டை

### சிவில் உடையில் பொலிஸார் கண்காணிப்பு


***யாழ். நிருபர்***

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவிகளுடன் வீதிகளில் பாலியல் ரீதியான சேட்டைகளில் ஈடுபடும் கும்பல்களுக்கு எதிராக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

விடுதிகள் மற்றும் வாடகை அறைகளில் தங்கியுள்ள மாணவிகள், பல்கலைக்கழகத்தில் தமது கற்றல் செயற்பாடுகளை முடித்துக்கொண்டு தமது தங்குமிடங்களுக்கு திரும்பும் வேளைகளில் பல்கலையை சூழவுள்ள வீதிகளில் அநாவசியமாக கூடி நிற்கும் இளைஞர் கும்பல்கள் மாணவிகளை இலக்கு வைத்து பாலியல் சேட்டைகளில் ஈடுபட்டு வருகின்றனர். மாணவிகளை நோக்கி ஆபாச வார்த்தைகளால் பேசுதல், தமது அந்தரங்க உறுப்புகளைக் காட்டுதல், ஆபாச சைகைகளை காட்டுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் அண்மையில் பாதிக்கப்பட்ட மாணவிகள் 300 பேர் கையொப்பமிட்டு, பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு முறையிட்டிருந்தனர்.

பல்கலைக்கழகத்திற்கு வெளியே இவ்வாறான செயற்பாடுகள் நடப்பதால், மாணவிகளால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளத்துடன், பல்கலைக்கழக சூழலில் சிவில் உடைகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.


**யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் திருக்கார்த்திகை உற்சவத்தின்போது நேற்று முன்தினம் (06) மாலை வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று வள்ளி, தேவசேனா சமேதரராக கைலாச வாகனத்தில் முத்துக்குமார சுவாமி எழுந்தருளி, ஆலய முன்றலில் அமைக்கப்பட்டிருந்த சொக்கப்பனை கொளுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நல்லூர் முருகப்பெருமான் வெளிவீதியுலா வந்தார்.**

திகதி 06.12.2022
செவ்வாய்க்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4961
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ.10,117,990.00
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 3 2 3 3 8 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.16,087,526.00

கொவிசெத
Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3203
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,472,280.00
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 30 39 47 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 61,284,964.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1416
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,072,620.00
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 1 9 3 4 6 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.11,714,071.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 991
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,610,520.00
வெற்றி இலக்கினம் J
வெற்றி இலக்கங்கள் 04 33 37 59
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 135,643,971.20

ராசி சுப பலன்
Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 270
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 8,675,400.00
இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 12 17 23 35
விசேட இலக்கினம் தனுசு
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.2,575,213.80

கோடி 28+
Mega POWER
மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1309
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,560,160.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.285,024,398.00
Λ 26 02 07 08 68
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2
பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk
Web : www.nlb.lk

# மலையக பாடசாலை மாணவர்களை போதை பாவனையிலிருந்து கட்டுப்படுத்த நடவடிக்கை



(ஆ.ரமேஸ்)

மலையகத்தில் பாடசாலை மாணவர்களை போதைப்பொருள் பாவனையிலிருந்து காப்பாற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடவடிக்கை எடுத்துள்ளது.

குறிப்பாக நுவரெலியா மாவட்ட பாடசாலைகளில் மாணவர்கள் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டுவருவதாக தகவல்கள் இ.தொ.காவுக்கு கிடைத்துள்ளன.

இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் மத்திய மாகாண நுவரெலியா மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.

இதையடுத்து இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையில் (07) காலை ஹட்டன் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒன்றுகூடல் இடம்பெற்றது.

இதில் காங்கிரஸ் தரப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜீவன் தொண்டமான், மருதபண்டி ராமேஸ்வரன் மற்றும் காங்கிரஸின் இளைஞர் அணிச் செயலாளர் அர்ஜூன் ஆகியோர் கலந்துகொண்டதுடன், பொலிஸார் தரப்பில் மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் தலைமையில் நுவரெலியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இத்தருணத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நுவரெலியா மாவட்ட பாடசாலைகள் அனைத்திற்கும் அவ்வப் பிரதேச பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் குழு அமைத்து பாடசாலைகளுக்கு சென்று மாணவர்களை போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுவிக்க கட்டாய நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரதி பொலிஸ்மா அதிபர் அதிகாரிகளுக்கு பணித்தார்.

அத்துடன் பிரதி பொலிஸ்மா அதிபரின் கட்டளையை மீறும் பட்சத்தில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதி பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் மலையக தோட்டப் பகுதிகள், நகர் மற்றும் பிரதேசங்களில் பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனையில் ஈடுபடாது காங்கிரஸ் அரசியல் ரீதியாகவும், தொழிற்சங்க ரீதியாகவும் பொலிஸாரின் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் என ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.



உக்குவளை மாருகொன வாசிப்போர் ஒன்றியமும் வானொலி அபிமானிகள் அரங்கும் கண்டி வானொலி சேவையும் இணைந்து மாருகொனவில் 'வானொலியும் நாமும்' எனும் தலைப்பிலான கருத்துரைகள் வழங்கும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதன்போது கலந்துகொண்ட பிரமுகர்களை படத்தில் காணலாம். (படம் – உக்குவளை நிருபர்)

# மாத்தளை தொழிற்பயிற்சி நிலையத்தில் கொரியன் - ஜப்பானிய மொழிப்பயிற்சி

(கண்டி நிருபர்)

மாத்தளை நாவுல பிரதேசத்தில் இயங்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தொழிற்பயிற்சி நிலையத்தில் கொரியன் மற்றும் ஜப்பானிய மொழிகள் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் சேவைகள் இராஜாங்க அமைச்சர் ரோஹண திசாநாயக்கா தெரிவித்தார்.

மேற்படி மத்திய நிலையத்திற்கு நேரடிக் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது-

தற்போதைய ஜனாதிபதி, முன்னர் பிரதமர் பதவி வகித்த காலத்தில் இம்மத்திய நிலையம் அவரால் திறக்கப்பட்டதாகவும் ஆங்கிலம், தமிழ் போன்ற மொழிகள் இங்கு கற்பிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

அதனை மேலும் அபிவிருத்திசெய்து சர்வதேச மொழிகள் கற்பிக்கும் இடமாக மாற்றியமைக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். குறிப்பாக ஜப்பான் மற்றும் கொரிய மொழிகளை கற்பிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், இது இளைஞர்களுக்கு ஜப்பான் மற்றும் கொரியாவில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள வசதியாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

# டவுன்சைட் தோட்டத் தொழிலாளர் பிரச்சினைக்கு தீர்வு வழங்காவிடின் தொழிற்சங்க நடவடிக்கை

## செந்தில் தொண்டமான் எச்சரிக்கை



வெலிமடை டவுன்சைட் தோட்டத்தில் தொழிலாளர்களுக்கு அரை பேர் வழங்கல், தொழிலாளர்களை முறையாக நடத்தாமை உள்ளிட்ட விடயங்களுக்கு தோட்ட நிர்வாகம் எதிர் வரும் திங்கட்கிழமைக்குள் தீர்வு வழங்காவிடின், போராட்டம் முன்னெடுக்கப்படுமென இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் தோட்ட நிர்வாகத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தொழிலாளர்கள் எதிர்கொண்டுள்ள இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் குறித்த தோட்டத்திற்கு எதிர்வரும் திங்கட்கிழமை நேரடியாக விஜயம் மேற்கொள்ளவுள்ளதுடன், தோட்ட நிர்வாகத்துடனான பேச்சுவார்த்தையில் முடிவு எட்டப்படாவிடின் மல்வத்தை பிளான்டேஷனுக்கு சொந்தமான அனைத்து தோட்டங்களிலும் பணிபுரியும் தொழிலாளர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவார்களென இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கு நவீனமயப்படுத்தப்பட்ட வகுப்பறை திறப்பு



(தலவாக்கலை நிருபர்)

மத்திய மாகாண சபையின் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் நிதியொதுக்கீட்டின் கீழ் தலவாக்கலை சுமண மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு நவீனமயப்படுத்தப்பட்ட புதிய விசேட வகுப்பறையொன்று மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ.கமகேவினால் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ.கமகே, தலவாக்கலை லிந்துலை நகரசபைத் தலைவர் சந்தன பிரதீப் குணதிலக்க, மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அஜித் பிரேமசிங்க, மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் அமரசிறி பியதாச, நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர் லசந்த அபேரத்ன, சுமண மத்திய கல்லூரியின் அதிபர் ஏ.பிரான்சிஸ் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# யாழ். பல்கலையில் 'ஒருங்கிணைக்கப்பட்ட ஊடகச் செய்தியறை'



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 'ஒருங்கிணைக்கப்பட்ட ஊடகச் செய்தியறை' (Integrated Newsroom) நேற்று முன்தினம் (06) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப் பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஹெல்வெற்றாஸ் நிறுவனத்துக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இது அமைக்கப் பட்டது. ஊடகக் கற்கைகள் துறை மாணவர்கள் அச்சு ஊடகங்கள், தொலைக்காட்சி, வானொலி மற்றும் இணைய ஊடகங்களில் ஒருசேரப் பயிற்சி பெறுவதற்கான வசதிகளையும் உபகரணங்களையும் கொண்டதாக செய்தியறை அமைக்கப்பட்டுள்ளது.

ஹெல்வெற்றாஸ் நிறுவனம் இலங்கையின் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகிய மூன்று பல்கலைக் கழகங்களில் முன்னெடுக்கும் சிந்தனை அரும்பு களங்களை (Incubator Spaces) உருவாக்கும் திட்டத்தின் ஓர் அங்கமாக இது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரின் ஜும்மா பள்ளி வீதியில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் ஊடகக் கலையகம் அமைந்திருக்கும் வளாகத்தில் நிறுவப்பட்டிருக்கும் இந்த ஒருங்கிணைக்கப்பட்ட ஊடகச் செய்தியறையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக ஹெல்வெற்றாஸ் சிந்தனை அரும்பு களத்தின் கருத்திட்ட முகாமையாளர் சந்துலா கும்புகஹே, ஊடகக் கற்கைகள் துறையின் தலைவர் பேராசிரியர் எஸ்.ரகுராம், இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்ற நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் மொகமட் அசாத், ஹெல்வெற்றாஸ் மற்றும் இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்ற அதிகாரிகள், ஊடகக் கற்கைகள் துறை விரிவுரையாளர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் பல்செயற்பாட்டுக் களமானது பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் மாணவர் கள், துறைசார் நிபுணர்கள், ஊடகத் தொழில் வாண்மையாளர்கள், வளவாளர்கள் ஆகியோருக்கிடையே இணைந்து செயற்படல் மற்றும் கூட்டுழைப்பு என்பவற்றுக்கான இயலுமையை வழங்கக் கூடியதாக அமையும் என இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஹெல்வெற்றாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

வெளிப்பாட்டுச் சுதந்திரம், தகவல் உரிமைகளை ஊக்குவிப்பதற்கான இக்கருத் திட்டமானது ஐரோப்பிய ஒன்றியத்தினால் நிதியீட்டம் செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

# வடையில் கரப்பான்பூச்சி காணப்பட்ட உணவகத்துக்கு யாழில் சீல் வைப்பு

(யாழ். நிருபர்)



வடையில் கரப்பான்பூச்சி காணப்பட்ட உணவகம் மற்றும் தயாரித்த சமையற்கூடம் என்பன நீதிமன்ற உத்தரவின் கீழ் சீல் வைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுகிழமை (04) யாழ்ப்பாணம் வண்ணை சிவன் கோவிலடியில் அமைந்துள்ள பிரபல சைவ உணவகத்தில் ஒருவர் வாங்கிய வடையில் கரப்பான்பூச்சி இருந்ததைக் கண்ட வாடிக்கையாளர், இது தொடர்பில் யாழ். நகரப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவனுக்கு முறைப்பாடு செய்தார். உடனே குறித்த உணவகத்திற்கு சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடையை பரிசோதனை செய்து நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முடிவு செய்திருந்தனர்.

இதனைத்தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை (05) மாநகர சுகாதார வைத்திய அதிகாரியுடன் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குறித்த கடையினை பரிசோதனை மேற்கொண்டிருந்தனர். இதன்போது பல சுகாதாரக் குறைபாடுகள் இனங்காணப்பட்டன. அத்துடன், குறித்த கடைக்கு வடை தயாரித்து வழங்கும் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சமையற்கூடமும் பரிசோதனை செய்யப்பட்டது. குறித்த சமையற்கூடமும் சுகாதார சீர்கேட்டுடன் இயங்குவது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கண்டறியப்பட்டது.

இதனையடுத்து நேற்று முன்தினம் (06) யாழ் மேலதிக நீதவான் நீதிமன்றில் யாழ். நகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவனால் கடை உரிமையாளருக்கு எதிராகவும் சமையற்கூட உரிமையாளருக்கு எதிராகவும் பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தனித்தனியாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இரு வழக்குகளையும் விசாரித்த நீதவான் குறித்த கடையையும் சமையற்கூடத்தையும் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக உடன் சீல் வைத்து மூடுமாறு உத்தரவிட்டதுடன், இரு சந்தேக நபர்களையும் தலா ஒரு இலட்சம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதித்தார். வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 25ஆம் திகதிக்கு நீதிமன்றால் ஒத்திவைக்கப்பட்டது. இதனையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் குறித்த கடையும் சமையற்கூடமும் சீல் வைத்து மூடப்பட்டன.

# சுற்றுப்புறக் காற்று தரக் கண்காணிப்பு நிலையம் யாழில் திறந்துவைப்பு



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நிறுவப்பட்ட சுற்றுப்புறக் காற்று தரக் கண்காணிப்பு நிலையம் நேற்று (07) காலை 9 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைமையில் இலங்கைக்கான உலக சுகாதார நிறுவனத்தின் நிதியுதவியுடன், சுற்றுப்புறக் காற்று தரக் கண்காணிப்பு நிலையம் யாழ்ப்பாணம் மாநகர சபையால் நிறுவப்பட்டது.

இதன் நினைவுக்கல்லை யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் திறந்துவைத்ததுடன், காற்று தரக் கண்காணிப்பு நிலைய பொறிமுறையை சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் சுபுன் எஸ். பத்திரகே, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் பி.ஹேமந்த ஜயசிங்க, உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதி வேர்கிங் மல்லவராச்சி, யாழ். மாவட்ட மேலதிக செயலாளர் ம.பிரதீபன், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் து.சுபோகரன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டிலீப் லியனகே, யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ். மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வவுனியாவில் நீரிழிவு தொடர்பில் விழிப்புணர்வு நடைப் பயணம்




(வவுனியா திவியா)

நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வு நடைப் பயணமொன்று வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா மருத்துவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா வைத்தியசாலை முன்பாக நேற்று (07) காலை ஆரம்பித்த விழிப்புணர்வு நடைப் பயணம் கண்டி வீதி ஊடாக வவுனியா நகரை அடைந்து இரண்டாம் குறுக்குத்தெரு, கந்தசாமி கோவில் வீதி, பசார் வீதி, மில் வீதி, ஹொரவப்பொத்தானை வீதி என்பவற்றினூடாக மீண்டும் வவுனியா வைத்தியசாலையை வந்தடைந்தது.

தொற்றா நோயான நீரிழிவு தற்போது நாடளாவிய ரீதியில் அதிகரித்து வருகின்றது. வவுனியாவிலும் இந்நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. மக்களது வாழ்க்கை முறையும், தவறான உணவுப் பழக்க வழக்கமுமே இந்நோய் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் எனவும் இது தொடர்பில் ஆரம்பத்திலேயே விழிப்பாக இருக்கவேண்டும் எனவும் வலியுறுத்தி குறித்த விழிப்புணர்வு நடைப் பயணம் இடம்பெற்றது.

இதில் மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் எம்.மகேந்திரன், மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதாரப் பிரிவினர், பொலிஸார், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், வர்த்தக சமூகத்தினர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.




# மேல்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் 556 மேலதிகப் பணியாளர்கள் நியமனம் - கோபா









2021 டிசம்பர் 31 வரை மேல்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கையைத் தாண்டி நாளாந்த சம்பள அடிப்படையில் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்கள் 556 பேர் காணப்படுவதாக கோபா குழுவில் புலப்பட்டது.

அதற்கமைய, நாளாந்த சம்பள அடிப்படையில் 396 பணியாளர்களும் ஒப்பந்த அடிப்படையில் 160 பணியாளர்கள் இருப்பதாகவும் புலப்பட்டது.

மேல்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2018, 2019 மற்றும் 2020ஆம் ஆண்டு கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் விசாரணை செய்வதற்கு அரசாங்க கணக்குகள் பற்றிய குழு நாடாளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தலைமையில் (05) நாடாளுமன்றத்தில் கூடியபோதே இந்த விடயம் புலப்பட்டது. இந்தக் குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹஷீம் பணியாற்றுகிறார்.

இந்தப் பணியாளர்கள், அத்தியாவசிய பணியாளர்கள் என வருகை தந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். இந்தப் பணியாளர்களை நிரந்தர அடிப்படையில் இணைத்துக் கொள்ள பல சந்தர்ப்பங்களில் முயற்சித்ததாகவும், அரசாங்க மாற்றத்துடனான கொள்கை மாற்றங்கள் உள்ளிட்ட சில விடயங்கள் காரணமாக அதனை மேற்கொள்ள முடியாமல் போனதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இந்தப் பணியாளர்கள் திட்டங்களின் அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டதாகவும் அவற்றிலிருந்து கிடைத்த வருமானத்தில் அவர்களுக்கு சம்பளம் வழங்கியதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

கடந்த காலங்களில் பாரிய திட்டங்கள் காணப்பட்டாலும் தற்பொழுது காணப்படும் டொலர் வீழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு விடயங்களால் வீதி அபிவிருத்தித் திட்டங்கள் குறைந்துள்ளதாக சரித ஹேரத் மற்றும் வருகை தந்த உறுப்பினர்கள் தெரிவித்தனர். இதனால் இந்தப் பணியாளர்களை நிரந்தர அடிப்படையில் சேவையில் இணைத்துக்கொண்டால் அவர்களுக்கான சம்பளத்தை திறைசேரியிலிருந்தே வழங்கவேண்டி ஏற்படும் என தெரிவித்தனர். அதனால் அத்தியாவசியப் பணியாளர்களை மாத்திரம் நிரந்தரமாக்குவது தொடர்பில் கண்டறிந்து செயற்படுமாறும் மேலதிகப் பணியாளர்கள் இருந்தால் இழப்பீடு வழங்கி அவர்களை நீக்குவது தொடர்பில் கருத்திற்கொள்ளுமாறும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

தற்பொழுது திட்டங்கள் குறைவு என்பதால் தேவைக் கமைய இந்தப் பணியாளர்களின் எண்ணிக்கையின் முக்கியத்துவ பட்டியல் உள்வாங்கப்படும் வகையில் அறிக்கையொன்றை 3 மாதங்களுக்குள் கோபா குழுவுக்கு வழங்குமாறு சரித ஹேரத் பரிந்துரைத்தார்.

அதேபோன்று, 2012ஆம் ஆண்டில் 158 மில்லியன் ரூபா செலவு செய்து கொள்வனவு செய்த இரண்டு கொங்கிறீட் இயந்திரங்கள் மற்றும் 6 மில்லியன் ரூபா பெறுமதியான கார்ப் இயந்திரம் இதுவரை செயலற்ற நிலையில் காணப்படுவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. 2012 முதல் 2022 நவம்பர் வரை கொங்கிறீட் இயந்திரங்கள் இரண்டும் 420 மணித்தியாலங்களே பயன்படுத்தியுள்ளமை, கார்ப் இயந்திரம் 2012 முதல் இதுவரை செயலற்றுக் காணப்படுகின்றமை இதன்போது புலப்பட்டது.

அதற்கமைய, 2011ஆம் ஆண்டளவில் பாரியளவில் பாதைகள் கொங்கிறீட் இடப்பட்டதாகவும் அதனால் 2012இல் இந்த இயந்திரங்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்ததாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். எனினும், இந்த இயந்திரங்களை கொள்வனவு செய்ததன் பின்னர் வீதிகளுக்கு கொங்கிறீட் இடுவது படிப்படியாகக் குறைந்ததாகவும் அதனால் இந்த இயந்திரங்களின் பயன்பாடு குறைந்ததாக அவர்கள் குறிப்பிட்டனர். அதனால் தற்பொழுது இந்த இரண்டு இயந்திரங்களில் ஒரு இயந்திரம் தமக்கு போதுமானது என அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்த இயந்திரங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் அமைச்சின் தலையீட்டில் தற்பொழுது வேலைத்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். அதனால் எதிர்காலத்தில் அவை பயன்படுத்தப்படும் எனக் குறிப்பிட்டார்.

அதற்கமைய, இதன் அடுத்தகட்டம் தொடர்பில் 3 மாதங்களில் அறிக்கையொன்றை கோபா குழுவுக்கு வழங்குமாறு பரிந்துரைக்கப்பட்டது.

மேலும், அதிகாரசபையின் அனுமதிக்கப்பட்ட பணியாளர்களில் இல்லாத திட்ட ஒருங்கிணைப்புப் பதவிக்கு 2 அதிகாரிகள் 2020 ஒக்டோபர் முதல் இணைத்துக்கொண்டுள்ளமை தொடர்பிலும் அவர்களுக்கு வழங்கப்பட்ட வாகன வாடகை மற்றும் எரிபொருள் செலவு என்பன தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. விசேட திட்டங்களுக்கு இவ்வாறு அதிகாரிகள் இணைத்துக்கொள்ளப்படுவதாகவும் அந்த திட்டங்கள் நிறைவடைந்ததன் பின்னர் அவர்களது சேவையை நிறைவுசெய்வதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். அதற்கமைய, இது தொடர்பில் ஒரு மாதத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோபா குழு பரிந்துரைத்தது.

அதற்கு மேலதிகமாக, அதிகாரசபைக்குச் சொந்தமான 20 வருடங்கள் பழைமையான 6 வாகனங்கள் காணாமல் போயுள்ளமை, 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் ஒப்பந்தக்காரர் ஒருவர் கடன் அடிப்படையில் அஸ்போல்ட் பெற்றுக்கொண்டமை மற்றும் அந்த நிதியை அறவிடுவது உள்ளிட்ட விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான லசந்த அழகியவண்ண, பிரசன்ன ரணவீர, டயனா கமகே, நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க ஜே.சி.அலவத்துவல, (வைத்திய கலாநிதி) சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, ஹெக்டர் அப்புஹாமி, அஷோக் அபேசிங்க, வீரசுமன வீரசிங்க, (கலாநிதி) சரத் வீரசேகர மற்றும் (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட ஆகியோர் கலந்துகொண்டனர்.

## Data Entry Operator

Company: Care Label Industries Pvt LTD
Requirements: GCE Advanced Level, Female preferred (Age 18-25), Excellent knowledge in Excel and MS Office
@ook gq b q f q oglbr-kj

## Deputy General Manager/Manager/ Manager/Investment Officer

mr shst shnm Employees' Trust Fund Board
@ook Chairman/CEO,
Employees' Trust Fund Board,
23rd Floor, 'Mehewara Piyasa',
P.O.Box 807, Narahenpita,
Colombo 05.

## Security Guard - Fixed Term: 18 Months (Female / Male)

mr shst shnm US Embassy Colombo
A rlb tmbshmmne nrhshnm Perform Guard services to safeguard New Embassy Compound/U.S Government property, personnel and observe area to protect property from fire damage or theft.

## Major Duties and Responsibilities

1. Prevent entry of unauthorized persons to New Embassy Compound and U.S. Government buildings.
2. Check persons and Vehicles desiring entry to New Embassy Compound/U.S. Properties.
3. Protect New Embassy Compound/ U.S. Government Property from fire, damage and theft.
4. Provide suitable information to Local Guard Force members regarding suspicious persons and vehicles movements.

For more information on how to apply visit the Mission web rls
gssor ..kj-tr l a rr -fnu. l a rr .inar.

## Health and Nutrition Manager

mr shst shnm Unicef
pt hq l msr University Degree on relevant field, Two years of experience
@ook gsso inar-t mlb encf. bv. m-tr. inar. 65 /

## Computer Assistant - Open to all interested applicants (Female/Male)

mr shst shnm US Embassy Colombo
A rlb tmbshmmne sg nrhshnm Under the supervision of the Systems Manager, manages the Embassy's computer operations and serves as a technical, Local Area Network (LAN) administrative advisor to the Systems Manager, on all computer-related issues. Serves as the primary training specialist for training users in new operating systems, productivity software, Department of State developed software and mobile devise usage, for one-on-one and one-to-many training presentations.
Provides technical guidance and desk-side support and computer expertise to all the Embassy users to ensure proper utilization of mission IT resources.
Requirements: Minimum of 4 years' work experience performing progressively more responsible work in the management, administration and utilization of computer systems and networks, PC support programming, hardware and software troubleshooting, training users on Windows workstation and MS Office applications is required.
For more information on how to apply visit the Mission
v a rls (gssor ..kj-tr l a rr -fnu. l a rr .inar.)

# வடக்கு, கிழக்கு, புத்தளத்தில் வாழும் மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த ஆக்கபூர்வமான செயற்பாடுகள் தேவை

## ரிஷாட் எம்.பி. நாடாளுமன்றத்தில் வலியுறுத்து

வடக்கு, கிழக்கு உட்பட புத்தளம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வாழும் மீனவர்கள், விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்த்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இதன்மூலம், சரிந்துபோன நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வழிவகை செய்ய முடியும் எனவும் மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.



நாடாளுமன்றில் நேற்று முன்தினம் (06) உரையாற்றும்போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர்,

"மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, புல்மோட்டை, வாழைச்சேனை, கல்முனை, நிந்தவூர், சாய்ந்தமருது, ஒலுவில், பொத்துவில், புத்தளம் மற்றும் கற்பிட்டி ஆகிய பகுதிகளில் அதிகமாக வாழும் மீனவர்கள் பலர், தொலைபேசியில் தொடர்புகொண்டு, மீனவத் தொழிலில் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தெரிவித்தார்கள். அவர்கள் தற்போது 430 ரூபாவுக்கு மண்ணெண்ணெய் வாங்கி மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்றனர். ஆனால், ஒரு கிலோ மீனை 400 ரூபாவுக்கு விற்பனை செய்யும்போது, இந்தத் தொழிலில் ஏற்படும் நட்டத்தை சுட்டிக்காட்டினார்கள். இதுதொடர்பில், கடற்றொழில் அமைச்சர் அரசாங்கத்துடன் பேசி, மீனவர்களுக்கு சகாய விலையில் மண்ணெண்ணெய் வழங்க நடவடிக்கை எடுக்கும்போதுதான். அவர்களது எதிர்காலம் பாதுகாக்கப்படும். தற்போது மீனவக் குடும்பங்கள் பல இந்தத் தொழிலை நிறுத்தி வருகின்றன. சிலர் தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாமல் அவதியுறுகின்றனர்.

அதேபோன்று, இராஜாங்க அமைச்சர் பேசும்போது, பல்வேறு வீடமைப்புத் திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதாகக் கூறினார். ஆனால், எமது பகுதிகளில், அவ்வாறான விடயங்கள் அவ்வளவாக நடைபெறுவதில்லை என்பதை கவலையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடற்றொழில் அமைச்சர் எமது மாகாணத்தைச் சேர்ந்தவர் என்ற வகையில், வடக்கு, கிழக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, அவர் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, மன்னார், வங்காலை பிரதேசத்தில் கடலரிப்பு ஏற்பட்டு, கடல்நீர் ஊருக்குள் புகுந்து முக்கியமான கிராமம் அழிந்துபோகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. கடலணைகள் அமைப்பதன் மூலமே இதனை தடுத்து நிறுத்த முடியும். எனவே, அமைச்சர் இந்த விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டும். அதேபோன்று, நிந்தவூர் பிரதேசத்திலும் கடலரிப்பினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த மக்களின் விடயத்திலும் நீங்கள் சிரத்தை எடுக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

சுற்றுலாத்துறைக்கு பேர்போன பொத்துவில் பிரதேசம் கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளது. எனவே, இப்போதே அதனை தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுங்கள். அதேபோன்று, கற்பிட்டி துறைமுகத்துக்கும் முகத்துவாரத்துக்கும் இடையில் உள்ள பாலம் ஒன்று உடைந்திருப்பதனால் மீனவச் சமூகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பாலம் அமைக்கும் திட்டத்தின் கீழ், அதன் நிர்மாணப் பணிகள் இடையில் நிறுத்தப்பட்டதனால் அந்தப் பிரதேச மக்களும் கஷ்டப்படுகின்றனர். இந்த விடயத்திலும் நீங்கள் அக்கறை செலுத்தி, மீனவர்களின் அன்றாட ஜீவனோபாயத்துக்கு உதவ வேண்டும்.

கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, வாழைச்சேனை ஆகிய இடங்களில் ஆழ்கடலில் மீன்பிடிப்போர் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். அவர்கள் உங்களை சந்தித்தபோது சில வாக்குறுதிகளை வழங்கியுள்ளீர்கள். கல்முனை, சாய்ந்தமருது மீனவர்கள் ஐஸ் நிலையம் இல்லாமல் கஷ்டப்படுகின்றனர். அங்கு எண்ணெய் நிரப்பும் நிலையங்களும் இல்லை. மேலும் வங்காலை, சிலாவத்துறை போன்ற இடங்களிலும் இதேபோன்ற பிரச்சினைகள் நிலவுகின்றன. எனவே, இந்தத் துறைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் தொடர்புகொண்டு, மீனவர்களின் கஷ்டங்களை போக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றேன்.

மேலும், இந்த உயர்சபையில் பேசிய விவசாயத்துக்குப் பொறுப்பான முன்னாள் அமைச்சர் பெரிய வீரர் போன்று உரையாற்றினார். இவர்கள் விவசாயத் தொழில் தொடர்பில் பிழையான முடிவுகளை எடுத்ததனால்தான், இந்த நாடு இவ்வளவு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது. கடன்காரராகவும் கையேந்துபவர்களாகவும் நாம் தள்ளப்பட்டமைக்கு, இவர்களின் பிழையான கொள்கைகளே பிரதான காரணம்.

எனினும். தற்போதையே அரசு விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை வழங்க நடவடிக்கை எடுத்துவருகின்றது. எனினும், அது நூறு வீதம் முழுமையடையவில்லை. எனவே, அதனையும் முறையாகச் செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றேன். கிருமிநாசினியின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அவற்றை சாதாரண, நியாயமான விலைக்கு வழங்க விவசாய அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று, மன்னாரில் கட்டுக்கரைகுளம், வியாயடிக்குளம், வவுனியாவில் பாவற்குளம் ஆகிய குளங்களைப் புனரமைத்து, விவசாயிகளுக்கு போதிய நீர் வசதிகளை செய்துகொடுங்கள். இந்தக் குளங்களை புனரமைப்பதற்கான முதற்கட்ட நிதியை ஒதுக்கி, அவசரமாக இதனை மேற்கொள்ளுங்கள்.

இந்த சபையில் 'ஹெட் ஓயா' திட்டம் பற்றி பேசப்பட்டது. அதனை முன்னெடுப்பதாகக் கூறியிருக்கின்றீர்கள். அதனை நடைமுறைப்படுத்தினால் பொத்துவில் பிரதேச மக்கள் பெரிதும் நன்மையடைவதோடு, நாட்டின் பொருளாதார விருத்திக்கு அந்தப் பிரதேசம் கைகொடுக்கும் என உறுதியாகக் கூறுகின்றேன்.

அத்துடன், அம்பாறை, வட்டமடு காணிப் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. சுமார் 400 ஏக்கர் அளவிலான இந்த விவசாயக் காணிகள் பல வருடங்களாக வனபரிபாலனத் திணைக்களத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதனை விடுவித்து, விவசாயிகளுக்கு வழங்குங்கள். அதேபோன்று, மன்னார், வவுனியா உள்ளிட்ட இன்னும் பல பிரதேசங்களிலும் வனபரிபாலனத் திணைக்களத்தினால் சுவீகரம் செய்யப்பட்டுள்ள விவசாயக் காணிகளை விடுவித்து, மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன்" - என்றார்.







சிவபூமி அறக்கட்டளையினால், செம்மணி பகுதியில் 'யாழ்ப்பாணம் வரவேற்கிறது' வளைவுக்கு அருகில் ஏழு அடி உயரமான சிவபெருமான் சிலை நேற்று புதன்கிழமை காலை 8 மணியளவில் பிரதிஷ்டை செய்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மதப் பெரியவர்கள், ஆர்வலர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். யாழ்ப்பாண நகருக்குள் நுழைவோர் சிவபெருமானை வணங்கி புனிதமாக நுழைய வேண்டும். அதேபோல் குறித்த வீதியில் பயணிப்போர் பாதுகாப்பாக இறை பக்தியோடு பயணிக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும் இந்தர; சிலை உருவாக்கப்பட்டதாக சிவபூமி அறக்கட்டளையினர் தெரிவித்தனர்.

# உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விவகாரம்; பிரதான பொலிஸ் பரிசோதகரின் வழக்கு ஒத்திவைப்பு!

(பாறுக் ஷிஹான்)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விவகாரம் தொடர்பில் கைதான பிரதான பொலிஸ் பரிசோதகர் தொடர்பான வழக்கு விசாரணை மீண்டும் எதிர்வரும் ஜனவரி மாதம் 18ஆம் திகதிவரை மறு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது குறித்த வழக்கு கல்முனை மேல் நீதிமன்ற நீதிவான் ஜயராம் ட்ரொக்ஸி முன்னிலையில் விசாரணைக்கு கடந்த திங்கட்கிழமை (5) வந்தபோதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்படி வழக்கானது விசாரணைக்காக எடுக்கப்பட்டவேளை பிரதிவாதி சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் கடந்த தவணையின் போது குறித்த வழக்கை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்வதன் அவசியத்தை வலியுறுத்தி விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தனர்.

இதற்கமைய குறித்த வழக்கை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் விசாரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் சார்பில் வழக்கை நெறிப்படுத்திய அரச சட்டவாதி மன்றிற்கு தெரிவித்தார்.

மேலும், குறித்த விசாரணையின்போது மன்றில் பிரதான பரிசோதகரின் கைது தொடர்பில் ஆட்சேபனை முன்வைத்ததுடன், பிரதிவாதியான பொலிஸ் பரிசோதகரை குறித்த வழக்கிலிருந்து பிணையில் விடுதலை செய்யுமாறு விண்ணப்பங்களை முன்வைத்திருந்தனர்.

இதனையடுத்து மீண்டும் நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸினால் எதிர்வரும் ஜனவரி மாதம் 18ஆம் திகதிக்கு குறித்த வழக்கு மறுதவணை இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், கடந்த உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலைத் தாக்குதல்களுடன் தொடர்புடைய சம்பவமாக கல்முனை - சாய்ந்தமருது பகுதி வீடொன்றில் இடம்பெற்ற தற்கொலை குண்டுவெடிப்புகள் குறித்த விசாரணைகளில் பிரதான பொலிஸ் பரிசோதகர் அபூபக்கர் என்பவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

கடந்த 2019 ஏப்ரல் 26ஆம் திகதி இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பிலான சாட்சிகளை மறைத்தமை தொடர்பில் அவரை கைதுசெய்ததாக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

சி.சி.டி. எனப்படும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட இவர், அம்பாறை பொலிஸ் உப கராஜின் பொறுப்பதிகாரியாக செயற்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# காத்தான்குடியைச் சேர்ந்த ஆசிரியரை காணவில்லை



(வெல்லாவெளி நிருபர்)

காத்தான்குடியைச் சேர்ந்த ஆசிரியர் ஏ.சி.அஜ்வத்தை காணவில்லையென காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் அவரது உறவினர் நேற்றுமுன் தினம் (6) இரவு முறைப்பாடொன்றை பதிவுசெய்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலையிலிருந்து இவரை காணவில்லையென அவரது உறவினர்கள் தெரிவிக்கின்றனர். காத்தான்குடியைச் சேர்ந்த ஆசிரியர் அஜ்வத் ஒள்ளிக்குளம் அல்-ஹம்றா வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றி வருகின்றார். நேற்று மாலை பாலமுனையிலுள்ள அவரது காணிக்கு சென்று வருவதாகக் கூறி வீட்டை விட்டுச்சென்றவர் நேற்று முன்தினம் இரவு வீடு திரும்பவில்லையென (இதுவரை வீடு திரும்பவில்லை) அவரது உறவினர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், உறவினர்களும் இவரைத் தேடி வருகின்றனர்.

இவர் மோட்டார்சைக்கிளில் (இல GQ 6819) சென்றதாகவும் சாரன் சேர்ட் அணிந்திருந்ததாகவும் உறவினர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். இவரைக் கண்டால் 0776168000, 0752204816, 0776010050 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தகவல்களை வழங்கமுடியும்.

# போசாக்கு நிறைந்த கீரைகளை அரைத்து உருவாக்கப்பட்ட தூள் பரிசோதனை!



(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் போசாக்கு உணவுத் திட்டத்தின் கீழ் கல்முனை ஆயுர்வேத மருந்துகள் உற்பத்திப் பிரிவினால் போசாக்கு நிறைந்த கீரை வகைகளை அரைத்து உருவாக்கப்பட்ட தூள் மூலம் இலைக்கஞ்சி தயாரிக்கப்பட்டு பணிமனையின் பிரிவுத் தலைவர்களுக்கு பரிசோதனைக்காக வழங்கப்பட்டது.

எதிர்காலத்தில் போசாக்கு மட்டம் குறைந்த பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட இந்தத் தூள், சிறுவர்களைக் கவரும் விதத்தில் சுவை மிகுந்ததாகவும் அதேவேளை, எந்தவொரு செயற்கை நிறமூட்டிகளோ சுவையூட்டிகளோ சேர்க்கப்படாமலும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கு அரசாங்க தரப்பில் இருந்தும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நன்கொடையாளர்களிடமிருந்தும் நிதி கோரப்பட்டுள்ளது.

குறித்த நிதி கிடைக்கும் பட்சத்தில் கல்முனை பிராந்தியத்திலுள்ள போசாக்கு குறைந்த மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு இலவசமாக இந்த போசாக்கு தூள் கஞ்சியுடன் சேர்த்து அல்லது வேறு வகை உணவுகளில் சேர்த்து வழங்கப்படும் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.ரிபாஸ் தெரிவித்துள்ளார்.

கல்முனை பிராந்திய ஆயுர்வேத பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ.நபீல் இணைப்புச் செய்யப்பட்ட இந்நிகழ்வில் பிரதி பணிப்பாளர் மற்றும் பணிமனையின் பிரிவுத் தலைவர்கள் பங்குபற்றினார்கள்.

கடந்த காலங்களில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் தயாரிக்கப்பட்ட போசாக்கு உணவுத் திட்ட பிரேரணை ஜனாதிபதியிடமும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடமும் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வித்தகர் விருதுபெற்ற நிந்தவூரின் மூத்த இலக்கிய ஆளுமையும் ஓய்வுபெற்ற அதிபருமான மைமூனா செயினுலாப்தீனை நிந்தவூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் குழுவொன்று அண்மையில் அவரின் இல்லம் சென்று கௌரவித்தது.

(படங்கள் – மாவடிப்பள்ளி நிருபர்)

# இலங்கை தென்கிழக்குப் பல்கலை கலை, கலாசார பீடத்தின் 11ஆவது ஆய்வரங்கு



(மாளிகைக்காடு நிருபர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் 11ஆவது சர்வதேச ஆய்வரங்கு நேற்று முன்தினம் (06) அப்பீடத்தின் கேட்போர் கூடத்தில் "சிறந்த பங்காளிகளுடன் இணைந்து நிலைபேறான அபிவிருத்திக்கான தற்கால நெருக்கடிகளை முகாமை செய்தல்" எனும் தொனிப்பொருளில் இடம்பெற்றது.

கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் தலைமையில் இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். இந்நிகழ்வின் வரவேற்புரையை ஆய்வரங்கின் இணைப்பாளர் எம்.எல்.பௌசுல் அமீர் நிகழ்த்தினார். தலைமை உரையை பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் வழங்கினார். இந்நிகழ்வின் பிரதம அதிதி தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் உரையாற்றினார்.

உபவேந்தர் தனது உரையில் சமகால இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்கு வழிவிடுவதாக ஆய்வுகள் அமைய வேண்டும் என்பதுடன், அதில் சமூக அறிவியல் மற்றும் மனிதப்பண்பியல் துறையின் முக்கியத்துவத்தை சிலாகித்துப் பேசினார். அத்துறை தொடர்பான ஆய்வுகள் மேலும் விரிவுடுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக்காட்டினார். அதனைத் தொடர்ந்து ஆய்வரங்கின் இணைச்செயலாளரும் புவியியல் துறைத் தலைவருமான கே.நிஜாமிர் முதன்மைப் பேச்சாளரை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்வில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் புவியியல் துறைப் பேராசிரியரான சங்கைக்குரிய பேராசிரியர் பின்னவல சங்கசுமண தேரர் முதன்மைப் பேச்சாளராக zoom தொழில்நுட்பத்தினூடாக கலந்து சிறப்பித்தார்.

சமகால உலக நெருக்கடிகள் இலங்கையின் நெருக்கடிகள் மற்றும் அவற்றை வெற்றிகொள்வதற்கான தந்திரோபாயங்கள் குறித்தும் உரையாற்றியதுடன், இவற்றை சமூக அறிவியல் மற்றும் மனிதப் பண்பியல் துறை ஆய்வுகள் எவ்வாறு கையாள்கின்றன? என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார். மேலும் கருத்து தெரிவிக்கையில், சமூக அறிவியல் மற்றும் மனிதப் பண்பியல் துறை ஏனைய துறைகளை ஊடறுத்துச் செல்லும் விதம் குறித்தும் சமூக அறிவியல் ஆய்வுப் பரப்பினை விஸ்தரிப்பதனூடாக சமகால நெருக்கடிகளை கையாளும் வழிவகைகள் குறித்தும் அவரது உரை கவனம் செலுத்தியது.

நன்றியுரையை ஆய்வரங்கின் இணைச்செயலாளர் ஐ.எல்.எம்.ஸாஹிர் வழங்கினார்.

இந்நிகழ்வில் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், நூலகர், துறைத் தலைவர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், போதனைசாரா ஊழியர்கள், ஊடகவியலாளர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# 'நபிகளாரின் சமூக உறவு' சமூகத்திற்கான வழிகாட்டி

தமிழ்நாடு சட்ட சபை உறுப்பினரும், எழுத்தாளருமான பேராசிரியர் எம்.எஸ்.ஜவாஹிருல்லா எழுதியுள்ள 'நபிகளாரின் சமூக உறவு' எனும் நூல் வாசிக்கக் கிடைத்தது.

உலகில் நூறு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பின்பற்றும் முஹம்மது நபிகளாரின் சமூக உறவு பற்றி ஆராயும் ஒரு முன்னோடி நூலாக இதனைக் குறிப்பிடலாம்.

12 அத்தியாயங்களுடன் 112 பக்கங்களில் கவர்ச்சிகரமான அட்டைப் படத்துடன் இந்த நூல் வெளிவந்துள்ளது.

களங்களும், தளங்களும் தடுமாறிக் கொண்டிருக்கின்ற தற்காலத்தில் சமூக நலன்களை நன்குணர்ந்து நாட்டுவதற்கு வந்த கலங்கரை விளக்கம் இதுவென முதுவை மு.பே.சக்திவேல் முருகன் இந்த நூலை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இந்நூல் பற்றி கருத்துத் தெரிவித்துள்ள சென்னை புஹாரி ஆலயம் அரபுக்கல்லூரி அதிபர் முனைவர் மௌலவி சையிட் ஜமாலி, மனிதநேயம், சகோதரத்துவம், பிற சமூகத்துடன் இணக்கமாக வாழ்வது பற்றி இந்நூல் சிறப்பாக பதிவு செய்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

காலத்தின் தேவைக்கேற்ற ஆக்கம் என தமிழ்நாடு ஜம்இய்யத்துல் உலமா செயலாளர் மௌலவி முனைவர் பி.எஸ்.அன்வர் பாதுஷா அலவி இந்நூல் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

நபிகளார் உருவாக்கிய முஸ்லிம் எனும் ஐக்கிய சமூகம் பன்மைச் சமூகத்தில் எத்தகைய உறவு வைத்திருக்க வேண்டுமென்பதை இந்நூல் எடுத்துக் காட்டுவதாக இலங்கை பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தமிழ் பேசும் உலகின் முன்னணி முஸ்லிம் அறிஞர்களது பாராட்டைப் பெற்றுள்ள பேராசியர் ஜவாஹிருல்லா, சென்னை பல்கலைக்கழகத்தில் மேலாண்மை அறிவியலில் எம்.பி.ஏ. பட்டமும், வட்டியில்லா வங்கிகளின் செயல்திறன் பற்றிய ஆய்வில் முனைவர் பட்டமும் பெற்றவராவார்.

வானியம் பாடி இஸ்லாமிய கல்லூரியில் 25 ஆண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றி, ஓய்வுபெற்று இப்போது மக்கள் நல பணியைச் செய்து வருகிறார். தமிழிலும், ஆங்கிலத்திலும் பல நூல்களை வெளியிட்டுள்ள இவர், 2003ஆம் ஆண்டில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தில் இந்திய சிறுபான்மையினர் சார்பாக உரையாற்றியிருக்கிறார்.

பேராசிரியர் ஜவாஹிருல்லா தான் எழுதியுள்ள இந்த நூலுக்கு வழங்கியுள்ள இந்த முன்னுரையில் முஸ்லிம் அல்லாத மக்களுடன் கண்ணியமாக நடந்துகொள்ள முஸ்லிம்கள் பணிக்கப்பட்டதன் விளைவாகவே உலகில் பல்வேறு நாடுகளில் முஸ்லிம் அல்லாத சமூகத்தினர் வழிபாட்டு உரிமை உட்பட பல்வேறு உரிமைகளை அனுபவித்து வருகின்றதை உதாரணங்களுடன் இந்நூலில் எழுதியுள்ளார்.

ஈராக்கில் வாழும் முஸ்லிம் அல்லாத யஜ்ஜி இனத்தார் கலிபாக்கள் காலந்தொட்டு ஜனாதிபதி சதாம் ஹுசைனின் காலம் வரையான பல்வேறு முஸ்லிம் ஆட்சியாளர்களின் கீழ் அந்நாட்டில் பாதுகாப்பாக வாழ்ந்து வந்தனர் என்பது வரலாற்றில் வசதியாக மறைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.





உலகளவில் இன்று மிக அதிகமாக விவாதிக்கப்பட்டுவரும் ஒரு கொள்கையாக இஸ்லாம் விளங்குகின்றது. இஸ்லாத்தின் சிறப்புகள் சரியான முறையில் ஒரு பக்கத்தில் எடுத்துரைக்கப்பட்டு வந்தாலும், மறுபுறத்தில் இஸ்லாத்தின் கொள்கைகள் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டும் பல நேரங்களில் பல்வேறு விமர்சனங்களுக்கும் உள்ளாகின்றன. தங்களை இஸ்லாத்தின் அடிப்படையில் நடந்து கொள்பவர்கள்போல் காட்டிக்கொள்ளும் சில குழுக்களின் நடவடிக்கைகள் மக்களிடையே இஸ்லாம் பற்றிய தவறான தகவல்களை பரப்பப்படுவதற்கும் காரணிகளாக அமைகின்றன என நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

12 அத்தியாயங்கள் மூலம் நூலாசிரியர் இஸ்லாம் பற்றி தவறாக பரப்பப்படும் கருத்துகளுக்கு உதாரணங்களுடன் பதில் வழங்கியுள்ளார்.

இஸ்லாத்தை ஏற்காத அபூதாலிபின் அரவணைப்பு என்ற அத்தியாயத்தில் இறை தூதரின் தந்தை அப்துல்லா நபிகளார் பிறப்பதற்கு முன்பும், ஆறு வயதானபோது அன்னை ஆமினாவும், 8 வயதானபோது அவரை வளர்த்த பாட்டனார் அப்துல் முத்தலீபும் மரணித்து விட்டார்கள்.

இதன்பிறகு அவர் தனது தந்தையின் உடன் பிறந்த சகோதரர் அபூதாலிபின் பொறுப்பில் வளர்ந்து வந்தார். இஸ்லாத்தை ஏற்காதபோதும் அபூதாலிப் நபிகளார் மீது பாசத்தைப் பொழிந்து அவருடைய பாதுகாப்புக்குத் துணையாக இருந்தார்.

இது குறைஷித் தலைவர்கள் மத்தியில் பெரும் கோபத்தை ஏற்படுத்தியது. ''அபூதாலிபே, உமது வயது அந்தஸ்து காரணமாக எங்கள் மதிப்பைப் பெற்று உள்ளீர். உமது சகோதரனின் மகனின் நடவடிக்கைகளை தடுக்குமாறு கோரினோம். இனியும் நாம் பொறுத்திருக்க மாட்டோம். ஒன்றில் முஹம்மதின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவோம் அல்லது முஹம்மதுடனும், உம்முடனும் இறுதிக்காலம் வரை சண்டையிடுவோம்'' என கூறிவிட்டுச் சென்றனர். தம் குலத்தவர்களின் பகையை சம்பாதிப்பது அபூதாலிபுக்கு பெரும் சிரமமாகவே இருந்தது. இதனை நபிகளாரிடம் எடுத்துரைத்தபோது இறைவன் மீது ஆணையாக வலது கையில் சூரியனையும், இடது கையில் சந்திரனையும் தந்துவிட்டு எனது பரப்புரையை கைவிடவேண்டுமென்று சொன்னாலும், அல்லாஹ் எனக்கு வெற்றி தரும் வரையில் அல்லது நான் மரணிக்கும் வரையில் எனது கொள்கையை கைவிட மாட்டேன் என உணர்ச்சி பெறுக கூறிய இறைதூதர் அழுகை பேரிட வெளியே செல்வதற்கு எழுந்தார். அப்போது அவரை மீண்டும் அழைத்த அபூதாலிப், "மகனே! உம்மீது உள்ள பாசத்தில்தான் இவ்வாறு சொன்னேன்'' என உணர்ச்சி பொங்க சொன்னார். அபூதாலிப் தமது இறுதி மூச்சுவரை இஸ்லாத்தை ஏற்காவிட்டாலும், அவர் முஸ்லிம் அல்லாதவர் என்பதற்காக அவருடைய அரவணைப்பை நபிகளார் நிராகரிக்கவுமில்லை.



இவர்கள் இருவரது புரிந்துணர்வும், உறவும் நம் அனைவருக்கும் வழிகாட்டியாகவே அமைந்துள்ளதென அந்த அத்தியாயத்தில் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். மற்ற மதத்தவர்களுடன் நபிகளார் நடந்துகொண்ட முறை பற்றிய நிறைந்த முன்மாதிரிகளை நூலாசிரியர் இந்த நூலில் உள்ளடக்கியுள்ளார்.

மதச் சார்பற்ற ஜனநாயக ஆட்சிக்கு மிகச் சிறந்த வழிகாட்டி நபிகளாரின் மதீனா சாசனமாகும். ஜோன் என்றோ மோரோ குடும்பம், கோத்திரம் மற்றும் மதத்துக்கு அப்பாட்பட்ட மதீனா அரசியலமைப்புச் சட்டம் அவைரையும் இஸ்லாமிய அரசின் குடிமக்கள் என அங்கீகரித்தது.

உலகிற்கே வழிகாட்டும் ஹுதைபியா உடன்படிக்கை பற்றி வியந்து எழுதியுள்ள வரலாற்று ஆய்வாளர் லெஸ்லி ஹஸ்டெல்டன், தனது முதல் முஸ்லிம் என்ற நூலில் காந்தி அடிகளும், மக்கிய வெளியும் இதனை விட சிறப்பாக செயற்பட்டிருக்க மாட்டார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

நூலாசிரியர் தனது மற்றொரு அத்தியாயத்தில் அறப் பணிகளில் வளரும் சமூக உறவுகள் பற்றி விரிவாக விளக்கியுள்ளார்.

தமிழில் ஒரு முன்னோடியாக அமையும் இந்த நூலில் பேராசிரியர் ஜவாஹிருல்லா உலகின் கோடிக்கணக்கான மக்கள் பின்பற்றும் சமூக உறவை பற்றி அறிமுகப்படுத்தியுள்ளார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சபைகளின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான (லோக் சபா) பேராசிரியர் காதர் முஹைதீன் இந்த நூலைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

நபிகளார் வாழ்ந்த காலத்தில் அவர் காட்டிய வழியும், ஊட்டிய நெறியும் மானிட சமூகத்தை ஒன்றிணைக்கும் முயற்சியாகவே இருந்தது. அந்த வழி இன்றைக்கும் முயற்சியாகவே இருந்துவருகிறது. இந்தியாவில் மட்டுமன்றி, முஸ்லிம்கள் எங்கு சிறுபான்மையினராக வாழ்கிறார்களோ, அவர்கள் எல்லோருமே நபிகளார் காட்டிய இந்த சமூக உறவு முறையைப் புரிந்து அதன்படி வாழ்ந்தால், என்றும் நலம் பெறுவர் என்பதை இந்த நூல் சுட்டிக்காட்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு உலக அறிஞர்களது பலரதும் பாராட்டுக்குள்ளான இந்த நூல் நபிகளாரின் வரலாற்றை கூறும் மற்றொரு நூல் அல்ல. பன்முக சமூகத்தார் ஒவ்வொருவரும் படித்து பின்பற்ற வேண்டிய வழிகாட்டியாகும்.

பேராசிரியரின் இந்த நல்ல முயற்சி தமிழில் மட்டுமன்றி, ஆங்கிலம் மற்றும் சிங்கள, ஹிந்தி ஆகிய மொழிகளில் வெளிவருவதன் மூலம் நபிகளாரைப் பற்றி தவறாக புரிந்துகொண்டுள்ளவர்களுக்கு பயனுள்ளதாக தமது ஷரத்துகளை மாற்றிக்கொள்ள பயனுள்ள ஒரு நூலாக அமையும் என்பது எனது நம்பிக்கை.

**என்.எம்.அமீன்**

# மட்டக்களப்பில் பாடசாலை மாணவன் தூக்கிட்டுத் தற்கொலை

(மண்டூர் நிருபர்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லடி, நொச்சிமுனை பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவன் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் கடந்த திங்கட்கிழமை (05) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்லடி, நொச்சிமுனையைச் சேர்ந்த பிரபல வைத்தியர் ஒருவரின் மகனான அகிலன் துஷ்யந்தன் (வயது 18) என்பவரே தூக்கிட்டுத் தற்கொலை செய்தவராவார்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

மட்டக்களப்பிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் உயிரியல் துறையில் கல்வி கற்றுவந்த குறித்த மாணவன், தனது வீட்டில் வளர்க்கும் நாயை அடித்ததனால் அதனை கேட்டு அவரின் தந்தை திட்டியதாகவும் அதனையடுத்து மாணவன் மனமுடைந்து தனது வீட்டில் யாரும் இல்லாத நிலையில், வீட்டின் மேல் மாடியில் உள்ள சமையலறையில் தூக்கிட்டுத் தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.


அதன்போது வீட்டுக்கு வந்த தாயார் சம்பவத்தைக்கண்டு தூக்கிலிருந்து மகனை மீட்டெடுத்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்த்து சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவானின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற காத்தான்குடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி வேலு மணிமாறன் சடலத்தைப் பார்வையிட்டு, பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கில் சமூக சேவை உத்தியோகத்தருக்கான விண்ணப்பம் கோரப்பட்டு ஒன்றரை வருடங்கள்

## இதுவரை எதுவித தகவலும் இல்லையென விண்ணப்பதாரிகள் விசனம்

(கிண்ணியா நிருபர்)



கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் சமூக சேவை உத்தியோகத்தருக்கான திறந்த போட்டிப் பரீட்சை விண்ணப்பம் கோரப்பட்டு ஒன்றரை வருடங்கள் கடந்த நிலையில், இதுவரையிலும் பரீட்சை நடைபெறவில்லை என விண்ணப்பதாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் (2021) போட்டிப் பரீட்சை தொடர்பில் விண்ணப்பம் கோரப்பட்டு தற்போதுவரை ஒன்றரை வருடங்கள் கடந்த நிலையில், குறித்த சமூக சேவை உத்தியோகத்தர் நியமனம் தொடர்பிலான எவ்வித அறிவித்தல்களுமோ போட்டிப் பரீட்சை நடத்துவது தொடர்பான அறிவித்தல்களோ முன்வைக்கப்படவில்லை எனவும் விண்ணப்பதாரிகள் தெரிவிக்கின்றனர்.

உரிய பரீட்சைக்காக கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுடன் விண்ணப்பித்து சுமார் ஒன்றரை வருடங்கள் கடந்துள்ளன. கிழக்கு மாகாணத்தில் நிலவும் வெற்றிடங்களை முன்வைத்து விண்ணப்பம் கோரப்பட்டாலும் பரீட்சை நடத்தப்படவில்லை. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களில் திறந்த போட்டிப் பரீட்சைக்கே இவ்வாறு சமூக சேவை உத்தியோகத்தருக்கான விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்திற்கொண்டு குறித்த போட்டிப் பரீட்சையை நடத்தி நியமனம் செய்யுமாறும் விண்ணப்பதாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# எமது நாடு கடலால் மாத்திரமல்ல கடனாலும் சூழப்பட்டுள்ளது

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. சாடல்

(கிண்ணியா நிருபர்)



இலங்கையானது நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்டுள்ளபோதிலும், நாம் டொலர்களை செலவழித்து வெளிநாடுகளிலிருந்து ரின்மீன்களை இறக்குமதி செய்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகளால் நாம் கடலால் மாத்திரமல்ல, கடனாலும் சூழப்பட்டுள்ளோம். நம்மை விட நமது அயல்நாட்டு மீனவர்கள் நமது கடல் வளத்தினை நன்கு அறிந்துவைத்துள்ளார்கள், அதனால்தான் அவர்கள் நமது கடல் எல்லையில் அத்துமீறி மீன்பிடித்து நமது மீன்வளத்தைக் கொள்ளையடித்துச் செல்கின்றார்கள் - என குழுநிலை விவாதத்தில் நாடாளுமன்றில் உரையாற்றும்போது திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், நான் பிரதிநிதித்துவப்படுத்தும் திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டை தொடக்கம் வெருகல் வரையான பகுதி கடல் வளமும், ஏரிகளும் நிறைந்த நீண்ட பிரதேசமாகும். தற்பொழுது சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலை மேற்கொள்வோர் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதன் காரணமாக பல மீன்பிடிப் படகுகள் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்றன. தற்போதைய எரிபொருள் பிரச்சினை காரணமாக மீனவர்களால் அதிக தூரம் பயணம் செய்து மீன்பிடித்தொழிலை மேற்கொள்ள முடியாதுள்ளது. எனவே, இவ்விரு விடயங்களையும் கருத்திற்கொண்டு சுருக்கு வலைக்கு விதிக்கப்பட்டுள்ள ஏழு கடல் மைல் என்ற கட்டுப்பாட்டினை நான்கு கடல் மைல்களாக தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

மீனவர்களுக்கு ஒவ்வொரு வாரமும் மண்ணெண்ணெய் கிடைப்பதற்கு எரிபொருள் அமைச்சருடன் பேசி மீன்பிடி அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும். தற்போது மீனவர்களின் இயந்திரங்களுக்கு எரிபொருள் பிரச்சினை பாரிய பிரச்சினையாக இருப்பதனால், எரிபொருளை பயன்படுத்தும் இயந்திரங்களுக்கு பதிலாக மின் சக்தியில் இயங்கும் இயந்திரங்களை அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வகையான இயந்திரங்கள் தாய்லாந்தில் பிரபலமானவை, இதன்மூலம் கடல் மாசுபடுவதும் குறைவடையும், மண்ணெண்ணெய்க்கான கேள்வியும் குறைவடையும்.

திருகோணமலை மாவட்டத்தில் ஒரேயொரு மீன்பிடித் துறைமுகமே காணப்படுகின்றது, கிண்ணியா - மூதூருக்கு இடையில் மற்றுமொரு துறைமுகம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அது மட்டுமல்லாது, பிடிபடும் மீன்களை பழுதுபடாமல் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு பிராந்திய ரீதியாக குளிரூட்டி அறைகள் (Cool Rooms) அமைக்கப்பட வேண்டும் எனவும் உரிய அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுசென்றார்.

# வாழைச்சேனையில் யானை தாக்கி வயோதிபரொருவர் பலி

(எச்.எம்.எம்.பர்ஸான்)



யானை தாக்கி நபரொருவர் மரணமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புணானை பகுதியில் வைத்து இந்தச் சம்பவம் நேற்று (7) காலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு மரணமடைந்தவர் 60 வயது மதிக்கத்தக்கவர் என்றும், மரணமடைந்த நபர் யாரென்று இதுவரை அடையாளம் காணப்பட வில்லை என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இவ்வாறு மரணமடைந்த நபரின் உடல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# எதிர்ப்புகளின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது அக்கரைப்பற்று பிரதேச சபையின் வரவு-செலவுத்திட்டம்

(நூருல் ஹுதா உமர்)



அக்கரைப்பற்று பிரதேச சபையின் 58ஆவது மாதாந்த பொதுச்சபை அமர்வு தவிசாளர் எம்.ஏ.றாஸிக் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றபோது பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் பொதுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

தேசிய காங்கிரஸ் சார்பில் தவிசாளர், உப தவிசாளர் அடங்கலாக ஐந்து உறுப்பினர்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் இரண்டு உறுப்பினர்களையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் ஒரு உறுப்பினருமாக மொத்தம் 08 உறுப்பினர்களைக் கொண்டுள்ள இந்த சபையின் வரவு-செலவுத்திட்டம் இம்முறையும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன், தேசிய காங்கிரஸ் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள முஹம்மது முகைதீன் முஸம்மில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் புதிய உறுப்பினர் ஆதம் லெவ்வை நாஜிட் மீரா லெவ்வை ஆகிய உறுப்பினர்கள் எதுவித கட்சி பேதங்களும் இல்லாமல் பட்டியடிப்பிட்டி ஜும்மா பள்ளிவாசலில் வைத்து பிரார்த்தனை முடித்த கையோடு பிரதேச சபை நோக்கி ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

நிகழ்வில் பிரதேச சபை தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள் சகிதம் பள்ளிவாசலின் தலைவர், நிர்வாகிகள், கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் கலந்து சிறப்பித்ததோடு, பிரதேச சபை வளாகத்தில் வைத்து சபை செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்களினால் கௌரவமான முறையில் வரவேற்கப்பட்டு சபை மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

உறுப்பினர்களின் வரவு-செலவு மீதான உரையில் கடந்த சபை அமர்வுடன் விடைபெற்ற சபது அஹமட் சியான் (தே.கா.), முகம்மது மையதீன் நஜீப் (அ.இ.ம.கா) ஆகியோரின் சேவைகள் தொடர்பில் அக்கரைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்கள் சிலாகித்துப் பாராட்டினர்.

# பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிக்கும் 16 நாள் செயற்பாட்டு நிகழ்வு



(கல்லடி நிருபர்)

பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் 16 நாள் செயற்பாட்டின் நிகழ்வு மட்டக்களப்பு, வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மண்டூர் மதியொழி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

அதிதிகளை வரவேற்று மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில், பல்வேறுபட்ட கலை நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டதுடன், சமூகத்தில் பல சவால்களை எதிர்கொண்டு தங்களது சமுதாயத்தில் சிறந்து விளங்கும் சாதனை பெண்களை கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகம் அரங்கேற்றப்பட்டதைத் தொடர்ந்து, விழிப்புணர்வு நடைபவனியும் ஆரம்பமாகியது, நடைபவனியானது மைதானத்திலிருந்து ஆரம்பமாகி, மண்டூர், பாலமுனை பாடசாலை சந்திவரை சென்று, மீண்டும் மைதானத்தை வந்தடைந்தது.

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளர் சட்டத்தரணி மயூரி ஜனன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் உளநல வைத்தியர் ஜே.சகாயதர்சினி, மாவட்ட சிறுவர், மகளிர் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி ஈ.ஏ.எஸ்.எதிரிசிங்க, வெல்லாவெளி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி , அருவி பெண்கள் வலையமைப்பின் ஊழியர்கள், பிரதேச மட்ட பெண்கள் அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# உணவுப் பாதுகாப்புத் திட்டத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் 1400 பலா கன்றுகள் விநியோகம்



(மட்டக்களப்பு நிருபர்)

எதிர்வரும் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு 1400 பலாமரக் கன்றுகள் வழங்கும் திட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரனின் தலைமையில் நேற்று முன்தினம் (06) மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் கருணாகரனின் வழிகாட்டலின்கீழ் உணவுப் பாதுகாப்புத் திட்டத்திற்கமைவாக மாவட்டத்தின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கில் மாவட்ட செயலகம், விமானப்படை மற்றும் 14 பிரதேச செயலகங்கள் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன.


இதற்கமைவாக 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு சுமார் 1400 பலாமரக் கன்றுகளை வழங்கும் திட்டத்தின் முன்னோடி நிகழ்வாக விமானப் படையினால் பலாமரக் கன்றுகள் கையளிக்கும் நிகழ்வு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன் முதற்தொகுதி பலாமரக் கன்றுகளை விமானப் படையின் குறூப் கெப்டன் டி.ஜீ.பீ.ரீ.கே.வர்கசூரிய மாவட்ட அரசாங்க அதிபர் கருணாகரனிடம் வழங்கினார். இதன் அடுத்த கட்டங்களாக பிரதேச செயலகப் பிரிவுகளில் பலாமரக் கன்றுகளை தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு விநியோகிக்கும் நிகழ்வு மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்தின் வழிகாட்டலில் விமானப்படையால் மேற்கொள்ளப்படவுள்ளன.

இம்மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், மாவட்ட உரச் செயலக உதவிப் பணிப்பாளர் கே.எல்.எம்.சிராஜுதீன் மாவட்ட பொறியியலாளர் கே.சுமன், நிர்வாக உத்தியோகத்தர் கே.தயாபரன், மாவட்ட தகவல் பொறுப்பதிகாரி வீ.ஜீவானந்தன், சமுர்த்தி திட்ட முகாமையாளர் எம்.அலிஅக்பர். நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் எம்.ஜுமைஸ் உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



மட்டக்களப்புல மீண்டும்
ஒட்டுக்குழு செயல்பாடு
உள்ளதாக சாணாக்கியன் எம்.பி.
சொல்லியிருக்காரு எலுவா?
ஒட்டுக்குழு தலைவருக்கு நரி
இராஜாங்க அமைச்சர் பதவி
வழங்கி அழகுபார்த்தால் ஒட்டாம
என்ன செய்வார்? மறுகா
உள்ளூராட்சித் தேர்தலும் வாற
வருஷம் வரப்போகுது எலுவா..
இனி அந்த அருண்தம்பிமுத்துட
பாட்டன்ட ஊட்ட ஒட்டுக்குழுவும்
வெள்ளவேனும் மீண்டும்
ஓடத்தான் போகுது!
என்ன நான் சொல்லுறது
சரிதானே!

# நாவிதன்வெளி பிரதேச சபையின் 2023இற்கான வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதம் ஒத்திவைப்பு

(பாறுக் ஷிஹான்)



மக்களது தேவை குறித்து புதிய வரவு-செலவுத் திட்டமானது சமர்ப்பிக்கப்படவில்லையென பெரும்பான்மையான உறுப்பினர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து குறித்த வரவு-செலவுத் திட்டத்தை திருத்தத்துடன் மீண்டும் சமர்ப்பிப்பதாக நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் அமரதாஸ ஆனந்த தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேச சபையின் 58ஆவது அமர்வு பிரதேச சபை சபா மண்டபத்தில் ஆரம்பமான நிலையில், 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கை நேற்று முன்தினம் (06) சபையில் தவிசாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் மீதான உறுப்பினர்களின் உரைகள் இடம்பெற்றன. இதன்போது சபையின் பெரும்பான்மையான உறுப்பினர்கள், தவிசாளர் தான்தோன்றித்தனமாக செயற்படுவதாகவும் மக்களின் தேவைகளை தவிர்த்து தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலில் செயற்படுவதாகவும் குற்றஞ்சாட்டினர்.

இந்நிலையில், ஒவ்வொரு உறுப்பினர்களின் வரவு-செலவுத் திட்ட உரையின் பின்னர் உடனடியாக பதிலளிக்கும் வகையில் தவிசாளரும் தன்பக்க நியாயங்களை சபையில் முன்வைத்திருந்தார்.

தொடர்ந்து மின்குமிழ் தொடர்பில் சபையில் எழுந்த சர்ச்சை காரணமாக வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்ட நிலையில், தவிசாளரினால் எதிர்வரும் டிசம்பர் 20ஆம் திகதிவரை சபை ஒத்திவைக்கப்பட்டது.

சபை ஒத்திவைப்பை ஏற்றுக்கொள்ளாத உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும், தவிசாளர் சபையை விட்டு வெளியேறியமையால் சபை நடவடிக்கைகள் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இறுதியாக வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த உறுப்பினர்கள்,

மக்களது தேவை குறித்து புதிய வரவு-செலவுத் திட்டமானது சமர்ப்பிக்கப்படவில்லை என்பதனாலும் பெண்களுக்கான உரிமை மறுக்கப்பட்டிருப்பதனாலும் மீண்டும் வரவு-செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப் பட்டாலும் தோற்கடிக்கப்படுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக அந்தோனி சுதர்சன், உப தவிசாளர் ஏ.கே.அப்துல் சமட், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம்.வி.நவாஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, சுயேட்சைக் குழு, முஸ்லிம் காங்கிரஸ், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை, உறுப்பினர்கள் தனிப்பட்ட ஒரு வர்த்தகரின் நிகழ்ச்சி நிரலில் இயங்குவதாகவும் தனது சேவை தொடர்பில் மக்கள் நன்கு அறிவார்கள் எனவும் கடவுளின் துணையுடன் மீண்டும் திருத்தங்களை மேற்கொண்டு எதிர்வரும் டிசம்பர் 20ஆம் திகதி வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தவிசாளர் ஊடகங்களிடம் குறிப்பிட்டார்.

# FIFA WORLD CUP - 2022





## போர்த்துக்கலின் புதிய நட்சத்திரம்

# ஹட்ரிக் சாதனை

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் சுவிட்ஸர்லாந்துக்கு எதிராக விளையாடிய போர்த்துக்கல் அணி வீரர் ரமோஸ், ஹட்ரிக் கோல் அடித்து சாதனை நிகழ்த்தினார்.

போர்த்துக்கல் - சுவிட்சர்லாந்து அணிகள் மோதிய போட்டி, லுசைல் நகரிலுள்ள ஐகானிக் மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் போர்த்துக்கல் நட்சத்திர வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோவுக்கு பிரதான அணியில் இடம் கிடைக்கவில்லை. அதனால் ரொனால்டோவின் ரசிகர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

அவருக்குப் பதிலாக 21 வயதான இளம் வீரர் கோன்சலோ ரமோஸ் களம் இறங்கினார். இவர், 17ஆவது நிமிடத்திலேயே தனது அணிக்கான கோல் கணக்கை தொடங்கிவைத்தார்.

33ஆவது நிமிடத்தில் பெர்னாண்டஸ் கோர்னர் பகுதியில் இருந்து தூக்கி அடித்த பந்தை, சக வீரர் பெபே தலையால் முட்டி மிரட்டலான கோல் ஒன்றை பதிவு செய்தார். இதன்மூலம் 39 வயதான இவர், உலகக் கிண்ணப் போட்டியில் அதிக வயதில் கோல் அடித்த இரண்டாவது வீரராக திகழ்கிறார்.

ஆட்டத்தை தனது முழு கட்டுப்பாட்டில் வைத்திருந்த போர்த்துக்கல் அணி, கோல் மழை பொழிந்தது. குறிப்பாக, ரமோஸ் ஹட்ரிக் கோல் அடித்து ரசிகர்களுக்கு விருந்து படைத்தார். அத்துடன், உலகக் கிண்ண வரலாற்றில், 32 ஆண்டுகளுக்குப் பின் நொக்-அவுட் சுற்றில் ஹாட்ரிக் கோல் அடித்த முதல் வீரர் என்ற பெருமையும் தட்டிச் சென்றார்.

நடப்பு உலகக் கிண்ணத்தில் முதல் ஹாட்ரிக் கோலாகவும் இது பதிவானது. 74ஆவது நிமிடத்தில் மாற்று வீரராக ரொனால்டோ களம் கண்டதும் ரசிகர்கள் எழுப்பிய உற்சாக குரலால் மைதானமே அதிர்ந்தது. வந்த உடனேயே அவர் ஒரு கோல் அடித்தார். ஆனால், அது ஓவ் சைட் என அறிவிக்கப்பட்டது.

கடைசி வரை போராடியும் சுவிட்சர்லாந்து அணியால் ஒரு கோல் மட்டுமே அடிக்க முடிந்தது. 2006இற்குப் பின் உலகக் கிண்ணப் போட்டியில் காலிறுதிக்கு போர்த்துக்கல் முன்னேறியது.

# பெனால்ரியில் வென்ற மொராக்கோ





உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் நொக் அவுட் சுற்றில் பெனால்ரியில் ஸ்பெயினை வீழ்த்தி முதல் முறையாக காலிறுதிக்கு முன்னேறியுள்ளது மொராக்கோ.

முன்னாள் சம்பியனான ஸ்பெயின் அணி - மொராக்கோ அணியுடன் மோதியது .போட்டி தொடங்கியது முதல் இரு அணி வீரர்களும் கோல் அடிக்க தீவிரம் காட்டினர். இருப்பினும், இரண்டு அணிகளின் கோல் கீப்பர்களையும் தாண்டி முன்கள ஆட்டக்காரர்களால் பந்தை கோல் வலைக்குள் தள்ள முடியவில்லை. இதனால், பிரதான நேரம் கோல் ஏதுமின்றி சமனில் முடிந்தது.

இதையடுத்து, கூடுதலாக 30 நிமிடம் வழங்கப்பட்டது. பந்தை அதிகநேரம் தன்வசம் வைத்திருந்த ஸ்பெயின் அணியின் கோல் முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்தன. குறிப்பாக, ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாஸ்களை ஸ்பெயின் வீரர்கள் விளையாடினர். இறுதி நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் சபீர் அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு நூலிழையில் தப்பித்தது.

இதனால், வெற்றியை தீர்மானிக்க பெனால்டி முறை கடைபிடிக்கப்பட்டது. இதில் ஸ்பெயின் அணியின் மூன்று வாய்ப்புகளையும் தடுத்த மொராக்கோ கோல் கீப்பர் யாசின், தனது அணிக்கு வெற்றியை ஈட்டித்தந்தார்.

நான்கில் மூன்று வாய்ப்புகளை கோலாக மாற்றிய மொராக்கோ 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதுவரை 6 முறை உலகக் கிண்ணத் தொடர்களில் பங்கேற்றுள்ள மொராக்கோ அணி, முதல் முறையாக காலிறுதி சுற்றுக்கு முன்னேறி அசத்தியுள்ளது. உலகக் கிண்ணப் போட்டியில் அதிகபட்சமாக நான்கு முறை பெனால்ரியில் தோல்வியடைந்த ஸ்பெயின் காலிறுதி வாய்ப்பைத் தவறவிட்டது.

# உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தான் பந்துகள்

உலகக் கிண்ணப் போட்டியில் பயன்படுத்தப்படும் பந்துகள் பயன்படுத்துவதற்கு முன்பு சார்ஜ் செய்யப்படும் சுவாரஸ்யமான தகவல் வெளியாகியுள்ளது. இது ஏன், எதற்காக பந்து சார்ஜ் செய்யப்படுகிறது ? என்பது பற்றிய தகவல் அனைவரையும் வியக்க வைக்கிறது.

பாகிஸ்தானிலுள்ள சியால்கோட்டில் உலகக் கிண்ணப் போட்டிக்காக தயாரிக்கப்பட்ட பந்துகளை அடிடாஸ் நிறுவனம் வாங்கி பயன்படுத்தி வருகிறது. அங்கு தயாரிக்கப்படும் பந்துகள் தரமானதாக உள்ளன. இதனால்தான் உலகக் கிண்ணத்துக்கான பந்துகளைத் தயாரிப்பதில் உற்பத்தி நிறுவனங்கள் சார்பில் ஆண்டுக்கு சுமார் 50 மில்லியன் டொலரை பாகிஸ்தான் ஈட்டி வருகிறது.



ஆசியாவில் முதல் அமெரிக்கா, ஐரோப்பா என உதைபந்தாட்டத்தை விரும்பி விளையாடும் பகுதிகளில் பெரும்பாலும் இங்கு தயாரிக்கப்படும் பந்துகள்தான் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் சியால்கோட் கால்பந்துகள் மிகவும் புகழ் பெற்றதாகவும் கட்டாரில் பயன்படுத்தப்படும் பந்து அல்-ரிஹ்லா (Al Rihla) என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இதற்கு அரபு மொழியில் பயணம் (Journey) என பொருள்படும்.

உலகக் கிண்ணப் போட்டிக்கான பந்துகள் பற்றிய இன்னொரு சுவாரஸ்யமான விஷயம் வெளியாகியுள்ளது. போட்டியில் பயன்படுத்தப்படும் பந்துகள் சார்ஜ் செய்யப்படுகின்றன. இதுதொடர்பான படங்கள் இணையதளங்களில் வெளியாகின. இது பல்வேறு சந்தேகங்களைக் கிளப்பியது. பொதுவாக பந்துகளில் காற்றுதானே அடைக்கப்படும்.

ஆனால், கட்டாரில் போட்டிக்கு முன்பு செல்போன்கள் போன்று சார்ஜ் ஏற்றப்படுகிறதா என பல்வேறு தரப்பினர் கேள்வி எழுப்பினர்.

இந்தக் கேள்விக்கு தற்போது விடை கிடைத்துள்ளது. அதன்படி, போட்டியில் பயன்படுத்தப்படும் பந்தின் உள்ளே சென்சார் ஒன்று உள்ளது. கால்பந்து செல்லும் திசை, வேகம் உள்ளிட்டவற்றை கண்காணிக்கும் வகையில் இந்த சென்சார் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த சென்சார் பற்றரி மூலம் இயங்குவதால்தான் போட்டிக்கு முன்பு சார்ஜ் செய்யப்படுவதாக அதிகாரப்பூர்வ தகவல் வெளியாகியுள்ளது. இவ்வாறு சார்ஜ் செய்வதன் மூலம் சென்சார் இயங்கி பந்தின் வேகம், திசையை கண்காணிக்கவும், பந்து எந்த இடத்தில் இருந்தது என்பதை துல்லியமாகக் காண முடியும். வார் நடுவர்களுக்கு உதவி இந்த புதிய தொழில்நுட்பம் மூலம் வீடியோ அசிஸ்டென்ட் நடுவர்களுக்கு (வார் அல்லது Video Assistant Referee OR VAR ) பெரிதும் கைக்கொடுத்து வருகிறது. முன்னதாக குரூப் எச் பிரிவில் நடந்த லீக் போட்டியில் போர்த்துக்கல், உருகுவே அணிகளுக்கான போட்டியின்போது இந்த தொழில்நுட்பம் கைகொடுத்தது. உருகுவேக்கு எதிராக போர்த்துக்கல் அடித்த கோல் சந்தேகத்தைக் கிளப்பியது. அதாவது புருனோ பெர்னாண்டஸ் அல்லது கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆகியோரில் கோல் அடித்தது யார் என்ற சந்தேகம் ஏற்பட்டது. இதற்கு இந்த தொழில்நுட்பம் மூலம் தீர்வு காணப்பட்டது. அப்போது புருனோ பெர்னாண்டஸ் தான் கோல் அடித்ததும், பந்து ரொனால்டோ மீது படாமல் இருந்ததும் தெரியவந்தது. 6 மணிநேரம் தாக்குப்பிடிக்கும் சார்ஜ் இந்த நிகழ்வை தொடர்ந்துதான் கால்பந்தில் சென்சார் பயன்படுத்துவதும், பந்து சார்ஜ் ஏற்றப்படுவதும் தெரியவந்தது. இந்த சென்சார் வெறும் 14 கிராம் மட்டுமே உள்ளது. பந்தில் உள்ள பற்றரியை ஒருமுறை முழுமையாக சார்ஜ் செய்தால் அது விளையாட்டின்போது 6 மணிநேரம் வரை தாக்குப்பிடிக்கும். பந்து விளையாட்டுக்கு பயன்படுத்தாவிட்டால் 18 மணிநேரம் வரை பற்றரியில் சார்ஜ் நீடிக்கும்.

உலகக் கிண்ணப் போட்டி தொடங்குவதற்கு முன்பாக போட்டியில் பயன்படுத்தப்படும் பந்துகளில் சென்சார்கள் இருக்கும் என்று FIFA மற்றும் அடிடாஸ் அறிவித்திருந்த நிலையில் தற்போது அது மேற்கூறிய வகையில் பயன்படுத்தப்பட்டு வருவதென்பது குறிப்பிடத்தக்கது.



# ஈரானில் இவ்வாண்டு 504 பேருக்கு தூக்கு

ஈரானில் நடப்பாண்டில் இதுவரை குறைந்தது 504 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர் என்று நோர்வேயை தளமாகக் கொண்டியங்கும் ஈரான் மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது.

ஈரானில் ஹிஜாப் சரியாக அணியவில்லை எனக் கூறி கடந்த செப்டெம்பர் மாதம் மாஷா அமினி என்ற 22 வயதுடைய இளம்பெண் அந்நாட்டு அறநெறி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தாக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார். பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்காகி இளம்பெண் மாஷா உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்து ஈரான் முழுவதும் பெண்கள் போராட்டத்தில் குதித்தனர். ஹிஜாப்பை கழற்றி வீசியும், ஹிஜாப்பை தீ வைத்து எரித்தும், கூந்தலை வெட்டி வீசியும் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டம் நாட்டின் பல நகரங்களுக்கு பரவி வருகிறது. ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டக்காரர்களை ஒடுக்க ஈரான் அரசு கடும் நடவடிக்கை எடுத்துவருகிறது.

போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியும், தடியடி, கண்ணீர் புகைகுண்டு வீசியும், கைது நடவடிக்கையிலும் ஈரான் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், இந்த ஆண்டு ஈரானில் இதுவரை குறைந்தது 504 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர் என்று நோர்வேயை தளமாகக்கொண்ட ஈரான் மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது. அவர்களில் 4 பேருக்கு இஸ்ரேலுக்கு உளவு பார்த்ததாக ஈரான் அரசு தூக்குத்தண்டனை நிறைவேற்றியுள்ளது. இது கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத அதிகபட்ச எண்ணிக்கை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2021ஆம் ஆண்டு சுமார் 333 பேர் தூக்கிலிடப்பட்டனர். இந்நிலையில், நியாயமான விசாரணை இல்லாமல் 504 நபர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது என்று மனித உரிமைகள் குழு இயக்குனர் மஹ்மூத் அமிரி-மொகத்தம் கூறினார்.

மரணதண்டனைகள் மூலம் சமூகத்தில் அச்சத்தை உருவாக்க வேண்டும் என்னும் நோக்கத்திலும், அரசின் உளவுத்துறை தோல்விகளிலிருந்து பொதுமக்களின் கவனத்தை திசை திருப்பும் நோக்கத்திலும் இந்த மரணதண்டனைகள் இருந்தன என்று மஹ்மூத் அமிரி-மொகத்தம் தெரிவித்தார்.

## தென் கொரிய நாடகம் பார்த்த....

# வடகொரிய சிறுவர்கள் இருவருக்கு மரணதண்டனை

தென்கொரிய நாடகம் பார்த்ததாக இரு சிறுவர்களுக்கு வடகொரியா மரணதண்டனை நிறைவேற்றியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

'K-Drama series' என்று உலகம் முழுதும் பிரபலமாக அறியப்படும் கொரிய நாடகங்களைப் பார்ப்பது, விநியோகிப்பது வடகொரியாவில் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், வடகொரியாவைச் சேர்ந்த 16 மற்றும் 17 வயதுடைய இரு சிறுவர்கள் சேர்ந்து, ரியாங்காங் மாகாணத்திலுள்ள ஒரு பாடசாலையில் கடந்த ஒக்டோபர் மாதம் தென்கொரிய மற்றும் அமெரிக்க திரைப்படங்கள், வெப்சீரிஸ்களை பார்த்ததாகக் கூறப்படுகிறது.


அந்த சிறுவர்களை பொது இடத்தில் வைத்து உள்ளூர்வாசிகள் முன்னிலையில் தூக்குத்தண்டனையை நிறைவேற்றியதாக கூறப்படுகிறது. இச்சம்பவம் ஒக்டோபர் மாதம் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிலையில், இதுபற்றிய தகவல்கள் கடந்த வாரமே வெளியாகின.



# லேடி காகாவின் நாய்க்குட்டிகளை திருடியவருக்கு 21 ஆண்டுகள் சிறை

## லொஸ்ஏஞ்சல்ஸ் நீதிமன்றம் அதிரடி





பிரபல பொப் பாடகி லேடி காகாவின் வளர்ப்பு நாய்களை திருடியவர்களுக்கு 21 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து லொஸ்ஏஞ்சல்ஸ் கவுன்டி நீதிமன்றம் செவ்வாயன்று உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்க பொப் பாடகி லேடி காகா. இவருக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் உள்ளனர். பாடகி, பாடலாசிரியர் மற்றும் நடிகை என பன்முக திறமைகளை உடையவர். தற்போது லொஸ்ஏஞ்சல்ஸ் நகரின் அருகிலுள்ள ஹொலிவுட் சிட்டியில் வசித்து வருகிறார். இவர் 'பிரெஞ்ச் புல்டோக்' என்ற வகையைச் சேர்ந்த விலை உயர்ந்த நாய்களை வளர்த்து வருகிறார்.

2021 பெப்ரவரி 24ஆம் திகதி அதிகாலை லேடி காகாவின் ஊழியர் ரேயான் பிஷ்சர் 3 வளர்ப்பு நாய்களை அழைத்துக்கொண்டு,வோக்கிங் சென்றுபோது அந்த வழியாக காரில் வந்த ஜேம்ஸ் ஹோவர்ட் ஜாக்சன் மற்றும் அவரது நண்பர்கள் ரேயானை துப்பாக்கியால் சுட்டுவிட்டு 2 நாய்களை திருடிச் சென்றுவிட்டனர். இந்தக் காட்சிகள் அனைத்தும் அருகே வீடொன்றிலிருந்த சிசிரிவி கெமராவில் பதிவாகியிருந்தன.

இது தொடர்பாக லொஸ்ஏஞ்சல்ஸ் பொலிஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வந்தனர். நாய்க்குட்டிகள் காணாமல்போனதால் சோகமடைந்த லேடி காகா, அவற்றை கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு 5 இலட்சம் டொலர் பரிசு வழங்கப்படுமென அறிவித்திருந்தார். ஆனால், சில நாட்களிலேயே பெண் ஒருவர் இந்த நாய்க்குட்டிகளை கொண்டுவந்து, லேடி காகாவிடம் ஒப்படைத்து விட்டார். இந்த திருட்டில் அவருக்கும் தொடர்பு உள்ளது என்பதை அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான ரேயான் பிஷ்சர், சிகிச்சைக்குப் பின்னர் வீடு திரும்பினார். திருட்டு வழக்கு மற்றும் கொலை முயற்சி வழக்கு பதிவுசெய்து ஜாக்சன் மற்றும் அவரது நண்பர்களை பொலிஸார் கைதுசெய்தனர்.

இந்த வழக்கு லொஸ்ஏஞ்சல்ஸ் கவுன்டி நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இவ்வழக்கு விசாரணை செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிலையில் நீதிபதிகள், ஜெக்சனுக்கு 21 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7